Srimad Appayya Deekshithendrar Jayanthi

SOUVENIR

30-9-1966

ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர்

ஸ்ரீ காலகண்டேசுவரர் ஸன்னிதி, அடையபலம்.

उमाकान्ते रमाकान्ते येषामासीन्मतिस्समा ।

नमामि दीक्षितेन्द्रांस्तान् नयषट्कविशारदान् ॥

ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை-1.

தமது தர்மத்தையும், ஸ்ரீ காமாக்ஷியின் மகிமையையும், ஜகத்குரு ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளின் வரலாற்றையும் உபதேசங்களையும் விளக்கும்

மாதப் பத்திரிகை

தாங்களும், தங்கள் நண்பர்களும் சந்தாதாரர்களாகச் சேரவேண்டும் என்பது எங்கள் அவா.

வருடச் சந்தா : இந்தியாவில் ரூ. 5—00 இந்தியாவுக்கு வெளியில் ரூ. 7—00

தனிப்பிரதி 00—50 பை.

பராபவ மாசி மாத இதழிலிருந்து எட்டாவது ஆண்டு ஆரம்பம்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். அறனை மறவேல். திருமாலுக்கடிமை செய்.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

குருவார விளம்பரம்

ஹிந்துக்கள் எல்லோருடைய ஒத்துழைப்பும் வேண்டும்.

நாம் இனி கவனக் குறைவாக இருக்கக்கூடாத மூன்று விஷயங்கள்

(ஸ்ரீ காமகோடி பீட ஆசார்ய ஸ்வாமிகள் அனுமதி பெற்ற முறை)

குடும்ப நிர்வாகமும், சீரான வாழ்க்கையும், தெய்வீக அருளும் வரவரக் குறைந்து வருவதைத் தடுக்க வேண்டும்.

காப்பியையும், சினிமாவையும், கற்புக்கு ஏற்படும் ஆபத்துக்களையும் கவனத்துடன் சிறிது சிறிதாகவாவது குறைக்கும் பணியில் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும்.

1. சமீப அனுபவத்தில் அரிசி, கோதுமை, நொய்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மோர்க் கஞ்சியைக் கையாண்டால் காப்பிப் பித்து குறைந்துவிடுகிறது.

2. ஆடவர்கள் பள்ளிகளில் படிக்கும் காலம்வரைக்கும், பெண்கள் எப்பொழுதுமே சினிமாக் காட்சிக்குப் போகாமல் இருப்பது நலம். (ஆனால் கல்வி அபிவிருத்திக்காகக் காட்டப்படும் படங்களைப் பார்ப்பதில் தோஷமில்லை.)

3. ஆடைகள் கூடியவரை ஆடம்பரமில்லாத ரகங்கள் வாங்கப்படவேண்டும். இவ் விஷயத்தில் பணக்காரர்கள் வழிகாட்ட வேண்டும்.

வீட்டுப்படிப்பில் முக்கியமாகத் தாய்பாஷையில் உள்ள பாரதப் பதிப்பில் பீஷ்மருடைய உபதேசங்களடங்கிய அனுசாஸன பர்வம் அவசியம் சேரவேண்டும்.

நாடும் குடித்தனமும் உண்மையில் சீராக, ஹிந்துக்கள் ஒவ்வொருவருடைய தனித் தனியான ஒத்துழைப்பு வேண்டும்.

இவ் விஷயங்களில் அபிப்பிராயங்கள் உள்ளவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்குத் தயவு செய்து எழுதவும்.

பி. ஜி. ப்ரால் அண்டு கம்பெனி,

புத்தக வியாபாரிகள், சென்னை.

திருடாதே. ஆற்றங்கரை, குளக்கரை, கோவில் இவ்விடங்களிலும் அவைகளின் சமீபத்திலும் அசுத்தம் செய்யாதே. —ஸ்ரீ ம. தர்ம தொண்டு சபை.

இந்த மலரில்

எண்			பக்கம்
1.	பூஜ்யஸ்ரீ ஆசார்யாள் ஸ்ரீ முகம்,	ஸம்ஸ்கிருதம்	... 1
2.	,, ,, ,,	தமிழ்	... 2
3.	स्वागतम्	ஸம்ஸ்கிருதம்	... 3
4.	सुवर्ण कुसुमाञ्जलिः	,,	... 5
5.	श्रीमदाचार्ययुग्मपञ्चरत्नस्तवः	,,	... 6
6.	श्री कालकण्ठेश्वरस्तोत्रम्	,,	... 7
7.	धरणीप्रार्थना	,,	... 8
8.	ஸ்ரீ காமகோடி ஆசார்யாள் வாங்முகம்,	தமிழ்	... 9
9.	ஸ்ரீ பகவத்பாதரும் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரும், போலகம் ஸ்ரீராம சாஸ்திரிகள்		... 9
10.	ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர், ஸ்ரீ S. சுப்ரமண்ய சாஸ்திரிகள்		... 10
11.	ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர், ரா. சீ.		... 11
12.	ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரின் அவதார ப்ரயோஜனம், ஸ்ரீ V. S. ராமநாத தீக்ஷிதர்		... 12
13.	அவதார புருஷர் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர், பலாசூர் ஸ்ரீ குப்புஸ்வாமி சாஸ்திரிகள்		... 14
14.	பஞ்சரத்ன ஸ்துதி, ஸ்ரீ ராமநாத தீக்ஷிதர்		... 17
15	மார்கபந்து பஞ்ச ரத்ன மாலா		... 19
16.	மார்கஸஹாய லிங்க ஸ்துதி		... 21
17.	ஸ்ரீ. அபீதகுசாம்பா ஸ்தவம்		... 22
18.	ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அத்வைத வித்யார்யரே, ஸ்ரீ S. R. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்		.. 25
19.	கனகாபிஷேகமும் கும்பாபிஷேகமும்		... 27
20.	శ్రీ మదప్పయ్య దీక్షితులవారి ప్రతిభాసంపన్నత, ఆకెళ్ళ అచ్యుతరామమ్		... 33
21.	శ్రీ అప్పయ్య దీక్షితులు, విద్వాన్ దివాకర్ల రామమూర్తి		... 36
22.	Srimad Appayya Deekshithendrar and his books, A. Ramanathan		... 39
23.	நன்றியுடன் கூடின வந்தனங்கள்		... 43
24.	ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் இயற்றிய நூல் பட்டியல்		... 44



ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள்

॥ श्रीः ।

॥ श्रीचन्द्रमौळीश्वराय नमः ॥

श्रीमुद्रा

स्वस्ति श्रीमदखिल भूमण्डलालंकारत्रयस्त्रिंशत्कोटि देवतासेवित श्रीकामाक्षीदेवीसनाथ श्रीमदेकाम्रनाथ श्री महादेवीसनाथ श्री हस्तिगिरिनाथ साक्षात्कार परमाधिष्ठान सत्यव्रतनामांकित काञ्ची दिव्यक्षेत्रे शारदामठसुस्थितानाम् अतुलितसुधारसमाधुर्य कमलासनकामिनीधम्मिल्लसम्फुल्लमल्लिकामालिकानिष्यन्द मकरन्दझरीसौवस्तिक वाङ्निगुम्भविजृंभणानन्दतुन्दिलितमनीषिमण्डलानाम् अनवरताद्वैतविद्याविनोदरसिकानाम् निरन्तरालंकृतीकृतशान्तिदान्तिभूम्नाम् सकलभुवनचक्रप्रतिष्ठापक श्रीचक्रप्रतिष्ठाविख्यात यशोऽलंकृतानाम् निखिलपाषण्डकण्टकोत्पाटनेन विशदीकृतवेदवेदान्तमार्गषण्मतप्रतिष्ठापकाचार्याणां श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य श्रीजगद्गुरु श्रीमच्छंकरभगवत्पादाचार्याणाम् अधिष्ठाने सिंहासनाभिषिक्त श्रीमन्महादेवेन्द्रसरस्वती संयमीन्द्राणाम् अन्तेवासिवर्य श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादादेशानुसारेण श्रीमज्जयेन्द्रसरस्वती श्रीपादैः क्रियते नारायणस्मृतिः ।

सर्वतन्त्रस्वतन्त्राणां परिमल - सिद्धान्तलेशसंग्रह-चित्रमीमांसादिचतुरधिकशतग्रन्थ-निर्माणचातुरीविशिष्टानां पदवाक्यप्रमाणपारावारपारीणानां समाहृत पौण्डरीकवाजपेयादिमहाध्वर विशेषसमुल्लसितदीक्षाविशेषाणां साक्षात्कृताद्वैतपरतत्वानां श्रीमदप्पय्यदीक्षितेन्द्रमहोदयानां जयन्ती महोत्सवः एतेषां जन्मस्थाने अडयप्पलं ग्रामे प्रतिवत्सरं तद्ग्रामाभिजनैः आस्तिकैः प्रचाल्यत इति रीतौ एतन्महोत्सवस्याविच्छेदेन प्रतिवत्सरं प्रवर्तनार्थं पर्याप्तमूलधनसंपिपादयिषया एतत् पराभव वत्सरीय जयन्तीवैभवसमये विशिष्य श्री दीक्षितेन्द्रविषयकः एको निबन्धः नैकाभिज्ञकर्तृकलेरवघटितः प्रकाशयिष्यत इति विदित्वा भृशं मोदामहे ।

आस्तिकाः एतन्महोत्सवाविच्छेदप्रवर्तनार्थं साहाय्यविरचनेन सहयोगेन च सर्वात्मना उपकुर्वन्तः " धर्मो रक्षति रक्षितः " इति रीत्या सकलप्रेयः श्रेयः परम्परा अवाप्नुयुरित्याशास्महे ।

यात्रास्थानम् : श्री कालहस्तिक्षेत्रम्
पराभवनिज श्रावणामावास्या

नारायणस्मृतिः ।

॥ श्रीः ॥

॥ ஸ்ரீ சந்த்ர மௌளீச்வராய நம: ॥

முத்ரை

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜக ஆசார்ய வர்யர்களான ஸ்ரீ சங்கர பகவத் பாதர்களால் ப்ரதிஷ்டை செய்யப்பெற்ற ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சந்த்ரசேகரேந்திர ஸரஸ்வதீ ஸ்ரீ பாதர்களின் ஆக்ஞானுஸாரம் ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதீ பாதர்களால் ஸ்ரீ காஞ்சீ மண்டலத்தில் அடங்கிய அடைய பல கிராம மஹா ஜனங்கள் விஷயத்தில் நாராயணஸ்மரணம் செய்யப்படுகிறது.

எல்லா சாஸ்திரங்களிலும் ஸ்வதந்திரம் உடையவரும் பரிமளம், சித்தாந்த லேச சங்கரஹம், சித்ரமீமாம்ஸா முதலிய 104 நூல்களை இயற்றுவதில் விசேஷமான சாமர்த்தியத்தை உடையவரும், வ்யாகரணம், தர்கம், மீமாம்ஸை, வேதாந்தம் முதலிய ஸாஸ்திரங்களின் கரைகண்டவரும் பௌண்டரீகம், வாஜபேயம் முதலிய பெரிய யாகங்களை செய்து முடித்து விசேஷ தீக்ஷையுடன் கூடியவரும், ஸாக்ஷாத்கரிக்கப்பட்ட அத்வைத பரதத்வத்தை உடையவருமான ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்திராளுடைய ஜயந்தி மஹோத்ஸவம் அவரது ஜன்ம பூமியான அடையபலம் கிராமத்தில் ப்ரதி வருஷமும் ஆஸ்திக மஹா ஜனங்களால் கொண்டாடி வருகின்ற ரீதியில், ப்ரதி வருஷமும் இடைவிடாமல் இதை கொண்டாட போதுமான மூலதனத்தை ஸம்பாதிக்கும்பொருட்டு இந்த பராபவ வருஷ ஜயந்தி மஹோத்ஸவ ஸமயம் ஒரு மலர் வெளியிட இருப்பதை அறிந்து மிகவும் சந்தோஷமடைகிறோம்.

ஆஸ்திகர்கள் அனைவரும் இந்த ஜயந்தீ மஹோத்ஸவம் இடைவிடாமல் நடக்கும் பொருட்டு; உதவி செய்வதுடன், உடனிருந்து தங்கள் ஒத்துழைப்பையும் அளித்து, எல்லா வகையிலும் உதவிசெய்து "தர்மத்தை ரக்ஷிப்பவர்களை தர்மம் ரக்ஷிக்கிறது" என்கிற ரீதியில் எல்லா இஷ்டங்களையும், புகழ் பரம்பரைகளையும் அடைவார்களாக என்று ஆசீர்வதிக்கிறோம்.

யாத்ராஸ்தலம்
ஸ்ரீ காளஹஸ்திக்ஷேத்திரம்
பராபவ ச்ராவண அமாவாஸை

நாராயண ஸ்ம்ருதி:

॥ श्री ॥

पार्वत्यम्बा समेत श्री कालकण्ठेश्वरं भजे ।
अग्रहारेऽडयफले स्थापितं चाप्पययज्वना ॥



பாரத தேசத்தின் நாபிஸ்தானமாக விளங்கும் காஞ்சி மண்டலத்திலடங்கிய
அடையபலம் கிராமத்தில் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்களால் ப்ரதிஷ்டை
செய்யப்பட்ட ஸ்ரீ பார்வத்யம்பா ஸமேத ஸ்ரீ காலகணடேஸ்வர
ஸ்வாமி தேவாலய மஹா கும்பாபிஷேகம் 16-3-'60-ல்
காஞ்சீ காமகோடி பீடாதிபதிகள்
ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகள்
அவர்கள் மஹா ஸான்னித்யத்தில்
நடந்த வைபவம்.

॥ श्रीः ॥

श्रीमति काञ्चीमण्डलान्तर्गते अडयप्पलनाम्नि अग्रहारे विकारिसंवत्सरफाल्गुनकृष्णचतुर्थ्यां
प्रचलिते श्रीमदप्पय्यदीक्षितेन्द्रप्रतिष्ठापितश्रीपार्वतीसमेतश्रीकालकण्ठेश्वर

कुम्भाभिषेकमहोत्सवसुसमये समागतानां

श्रीकाञ्चीकामकोटिपीठाधिपतीनां जगद्गुरुशङ्कराचार्यवर्याणां श्रीचन्द्रशेखरेन्द्रसरस्वतीनां
श्रीजयेन्द्रसरस्वतीनां च चरणकमलयोः अडयप्पलवासिमहाजनैः सादरं समर्प्यमाणा

स्वागतपत्रिका

—: * :—

श्रीकाञ्च्यां कामकोटीत्यतिमहितमहापीठमास्थाय लोकक्षेमं कायेन वाचाऽप्यनवरतशुभाशंसिचित्तेन तन्वन् ।
भाभात्याचार्यवर्यः परमकरुणया पूर्णदृष्ट्याऽनुगृह्णन् भक्तान् श्रीचन्द्रमौलीश्वरपदकमलध्यानपूतान्तरात्मा ॥ १ ॥

आश्रीशङ्करनामरूपभगवत्पादाभिधाचार्यतोऽप्याच श्रीगुरुचन्द्रशेखरयतेः कारुण्यपूर्णात्मनः ।
श्रीकाञ्चीपुरि कामकोट्यभिधया प्रख्यातपीठे स्थितान् ख्यातानिन्द्रसरस्वतीति जगदाचार्यान् यतीन्द्रान् नुमः ॥

काञ्चिकामकोटिपीठनायकं जगद्गुरुं चन्द्रशेखरेन्द्रसंयमीन्द्रसत्सरस्वतीम् ।
धर्मभक्तिबोधवृत्तशीलशिक्षकं नृणां स्वानुभूतितृप्तमाश्रितानुकंपिनं भजे ॥ ३ ॥

श्रीकाञ्चिकामकोटीपीठाधिपते जगद्गुरो स्वामिन् । स्वागतमिन्द्रसरस्वत्युपपदयुत चन्द्रशेखरयतीन्द्र ॥ ४ ॥

त्रिंशद्वत्सरपरिमितकालादि यतो ह्यदर्शनोत्सुकान् । बलवद्भवद्दिदृक्षानस्माननुग्रहीस्त्वमेत्यात्र ॥ ५ ॥

निद्रातन्द्राहीनस्सन्ततचिन्तितजगद्धितोऽनुदिनम् । करुणाविष्टस्वान्तस्सन्मार्गे प्रेरयन् जनानटसि ॥ ६ ॥

आसेतोराकाश्याः पवित्रिता यात्रया धरित्रीयम् । भवता लोकानवता जनता परिरक्षितोपदेशवशात् ॥ ७ ॥

मुद्राधिकारिसंसत्प्रचारणात् कामकोटिपत्राच्च । तनुषे ग्रामनगरयोः रक्षां पूर्तादिमुख्यधर्मस्य ॥ ८ ॥

वेदस्य धर्मशास्त्रस्य च परिपालनसभां बहुत्र नयन् । वेदज्ञान् धर्मज्ञान् गृह्यज्ञान् जनयसि प्रयोगज्ञान् ॥ ९ ॥

स्वर्णकटकाभिभूषितकरान् वरान् वेदलक्षणाभिज्ञान् । विदुषोऽपि शास्त्ररत्नाकरबिरुदवहान् करोषि निष्कपटान् ॥

शिवविष्णुभक्तिवर्धकभक्तकृतद्राविडप्रबन्धमुखात् । हरिहरसमरसभक्तिं तन्वन् नास्तिक्यनिरसनं कुरुषे ॥ ११ ॥

प्रतिसममद्वैतसभाप्रचालनात् ब्रह्मविद्यया पत्या । भगवत्पादोद्घाटितमुपनिषदां तत्वमाविरपि कुरुषे ॥ १२ ॥

चतुरधिकशतग्रन्थानाकलयन् यो जगद्धितं चक्रे । श्रीकालकण्ठदेवप्रतिष्ठयैतत्पुरस्य हितकृद्यः ॥ १३ ॥

स जयति परिमलसिद्धान्तलेशसंग्रहमुखैर्निबन्धवरैः । अद्वैततत्वमाविष्कुर्वन् अप्पयमखी शिवस्यांशः ॥ १४ ॥

तेनाप्पदीक्षितेनाध्युषितेऽस्मिन्नडयपलमिति प्रथिते । ग्रामे श्रीचरणानां सन्दर्शनमद्य भाग्यवशलब्धम् ॥ १५ ॥

श्रीमद्दीक्षितवंशोद्भवस्तदीयाग्रहारसंवासः । तद्भक्तिपरीवाहस्त्वयमिदमाचार्यदर्शने हेतुः ॥ १६ ॥

श्रीचरणवाङ्मयामृतपायी श्रीपार्थसारथिपुरस्थः । भक्तः पार्वत्यम्बालयमाकलयन्नवं जगन्नाथः ॥ १७ ॥

श्रीमतः कालकण्ठस्य श्रीमदप्पय्ययज्वनः । श्रीचन्द्रशेखरगुरोः दृष्टिरेकत्र नोऽभवत् ॥ १८ ॥

श्रीचन्द्रशेखरेन्द्राणां जयेन्द्राणां च दर्शनात् । आह्लादिनो विजयिनो वयमद्य बभूविम ॥ १९ ॥

अप्पय्यदीक्षितेन्द्राणां जन्मभुव्यडयप्पले । निवसद्भिप्रकलितं गुरुस्वागतभाषणम् ॥ २० ॥

विकारिनामसंवत्सरे
फाल्गुण - कृष्ण - चतुर्थ्याम्
सौम्यवासरे
(16-3-1960)

इत्थं
अडयप्पलम् - भक्तमहाजनाः



॥ श्री ॥

॥ भगवत्पादस्तुतिः ॥

नित्यं ये करुणारसार्द्रहृदयाः संसारिणां ज्ञानदाः
यानेवाहुरिहागतं परशिवं न्यग्रोधमूलाद्ध्रुवम् ।
वादे नास्तिकबौद्धमुख्यकुधियोयैर्निर्जिताः सत्वरं
तेभ्यः सादर भक्तिकाऽस्तु भगवत्पादेभ्य आनाम्रिका ॥ 1 ॥

येभ्योऽवाप चिरन्तनी श्रुतिरपि व्याख्यां यथार्थां चिरात्
येषां वागमृतं निपीय मनुजा मुच्यन्त एव स्फुटम् ।
येष्वासन्नखिलाः प्रकामसुखदाः शान्त्यादिकाः सद्गुणाः
श्रीमच्छंकरदेशिकान् भगवतः तान् प्रत्यहं भावये ॥ 2 ॥

॥ श्रीः ॥

॥ सुवर्णकुसुमाञ्जलिः ॥

यस्मिन् शङ्करशब्दार्थः परिपूर्णो विराजते ।
तस्मै श्रीशङ्कराचार्यस्वामिने गुरवे नमः ॥ 1 ॥

कामकोटिमहापीठदिव्यालङ्काररूपिणे ।
श्रीमते सच्चिदानन्दमूर्तये गुरवे नमः ॥ 2 ॥

राजाधिराजसंपूज्यपादाब्जाय महात्मने ।
अद्वैताचार्यवर्याय तुर्याश्रमजुषे नमः ॥ 3 ॥

गुरु श्रेष्ठाय लोकस्य साक्षात् ब्रह्मस्वरूपिणे ।
सर्वलोकशरण्याय चिन्मयाय नमो नमः ॥ 4 ॥

स्वस्वरूपानुसन्धाननित्यानन्दानुवर्तिने ।
ज्ञानयोगैकनिष्ठाय ब्रह्मतेजस्विने नमः ॥ 5 ॥

वेदशास्त्रपुराणेतिहासतत्त्वार्थवर्षिणे ।
श्रीमच्छङ्करयोगीन्द्रस्वामिने गुरवे नमः ॥ 6 ॥

भक्तसंघपरित्रातृदिव्यमङ्गलविग्रहम् ।
मनसा चिन्तये नित्यं शङ्करार्यमहागुरुम् ॥ 7 ॥

जगद्गुरुवरेण्याय भक्तहृत्पद्मभानवे ।
श्रीमते शङ्कराचार्ययतिवर्याय मङ्गलम् ॥ 8 ॥

॥ इति शम् ॥

॥ श्रीः ॥

॥ श्रीमदाचार्ययुग्म पञ्चरत्नस्तवः ॥

—: * :—

नारायणेति सन्नाम्नः भक्तानां प्रतिवन्दनम् ।
उच्चारणेन येषां वै पवित्रं मुखपङ्कजम् ॥ 1 ॥

श्रीचन्द्रमौलिपूजायां लोकानुग्रहदीक्षया ।
लग्नं चिद्रूपिणां येषां पवित्रं करपङ्कजम् ॥ 2 ॥

श्रीकामकोटिकामाक्षीध्यानपूतं हृदंबुजम् ।
आनन्दरससंपूर्णं येषां तेभ्यो नमो नमः ॥ 3 ॥

सच्चिदानन्दभूम्न्येव प्रत्यक्प्रवणतायुतम् ।
येषां मानसमत्यन्तं तेभ्यः सन्तु नमस्क्रियाः ॥ 4 ॥

द्विगुणीक्रियतां निजप्रयासः कलिदोषापहृतिप्रशस्तलक्ष्यः ।
इति सूचयतीव कामकोटीवरपीठस्थितसंयमीन्द्रयुग्मम् ॥ 5 ॥

के. आर. सुब्रह्मण्यम् ।



॥ श्रीः ॥

॥ श्रीपार्वत्यम्बासमेत श्रीकालकण्ठेश्वरस्तोत्रम् ॥

कालकण्ठेश्वरं वन्दे नीलकण्ठपितामहैः ।
स्थापितं तं निजग्रामे पार्वतीसहितं प्रभुम् ॥ 1 ॥

लब्धुं साफल्यमस्माकं जन्मनः पार्वतीपतिम् ।
वन्दामहे कालकण्ठं दीक्षितेन्द्रप्रपूजितम् ॥ 2 ॥

कण्ठे कालं स्मराम्यद्य देवासुर भयापहम् ।
यतिवर्यैर्यज्वमुख्यैर्मुनीन्द्रैश्च सदार्चितम् ॥ 3 ॥

मतानां वै चतुर्णां ये सारं प्राबोधयन् पुरा ।
अभ्यर्हितं तैरप्पय्यैः कालकण्ठेश्वरं भजे ॥ 4 ॥

नोपलभ्येत भूलोके येषां पाण्डित्यसादृशी ।
तैः प्रतिष्ठापितं देवं कालकण्ठं भजाम्यहम् ॥ 5 ॥

ममता परिहारार्थं शिवाद्वैतप्रबोधकैः ।
स्थापिते रमतां नाथे "**कालकण्ठे मनो मम**" ॥ 6 ॥

कालकण्ठेश्वरं काल - कालं कालत्रयाधिपम् ।
कालत्रयेऽपि कलये कलिदोषापनुत्तये ॥ 7 ॥

कालकण्ठं प्रणम्याद्य प्रार्थयामि मुहुर्मुहुः ।
भक्तानामार्तिगरळं कबलीक्रियतां पुनः ॥ 8 ॥

हेमाभिषिक्तैराराध्यं न्यायरक्षामणिप्रदैः ।
कुम्भाभिषिक्तं तद्वंश्यैः कालकण्ठं नमाम्यहम् ॥ 9 ॥

॥ शुभमस्तु ॥

सिकन्दराबाद
आन्ध्रराज्य

"आत्रेय" वेंकटसुब्रह्मण्यम्

॥ श्रीः ॥

॥ धरणीप्रार्थना ॥

—:*:—

अयि नाथ मया कियच्चिरं सहनीयं महनीय माधव ? ।
कलिदोष भरं सुदुष्कृतं भृशमाम्रेडितमेव मानवैः ॥ 1 ॥

यदपीह मम क्षमाभिधा भवति, स्वैरमहो ! महोद्धतैः ।
मनुजैर्दनुजातिशायि भोः ! क्रियते पापमसह्यवेदनम् ॥ 2 ॥

भवता कथमीश भूयते मयि दुःखाम्बुधिमग्नसंविदि ।
निभृतं करुणामय प्रभो ! झषकूर्माऽऽदिवराहरूपिणा ॥ 3 ॥

नरसिंह कथं सुपीडिता तव जायेयमुपेक्ष्यतेऽधुना ।
भवता खलु नास्तिकैस्सुतैर्मम नारायण पापजीवितैः ॥ 4 ॥

अयि मानवतां गतं त्वया बलिदर्पापनुतिक्रमे विभो ।
किमु नोद्धरणार्हतां गता प्रसमार्तिक्षुभिताऽहमीदृशी ॥ 5 ॥

क गतः परशुस्तवार्तिहन् ! क्षितिपान् येन वधं त्वमार्तिदान् ।
अकरोः, करुणानिधेऽधुना मयि सन्तीह खलाः परश्शतम् ॥ 6 ॥

क भवान् रघुनायकोत्तमः ? क च नीचाः सुतमित्रबान्धवाः ?
सुजनान् भुवि रावयन्ति ये कथमद्यापि न मेऽस्ति ते दया ॥ 7 ॥

भुवि धर्मतरोर्यदा यदा भवति ग्लानिरहं तदा तदा ।
स्वयमुद्भवितेति विस्मृतं वचनं ते किमु पार्थसारथे ? ॥ 8 ॥

न हि भूतदया महीतले भगवन् बुद्ध दयार्द्रमानस ।
व्यवहारमनन्त कुर्वते मनुजाः केशव निर्दयं मिथः ॥ 9 ॥

कथितं प्रथितैर्मुनीश्वरैः कलिदोषापहतिक्षमो भवान् ।
प्रभविष्यति कल्किरूपवान् इति तावत्प्रसहिष्यते कथम् ? ॥ 10 ॥

इति भूपरिदेवनं मया करुणं साश्रु कलिप्रपीडनात् ।
हरिपादसमीपतः श्रुतं दयतां द्राक्करुणापयोनिधिः ॥ 11 ॥

सिकन्दराबाद, }
आन्ध्रप्रदेशः }

आत्रेय-वेंकटसुब्रह्मण्यशर्मा

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள்

அடையபலம்

ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட
ஸ்ரீ காலகண்டேச்வரர் ஆலய மஹா கும்பாபிஷேகத்தன்று (16—3—1960)
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களின்

வாங்முகம்

இவ்வூரில் கும்பாபிஷேகம் நடத்தப்படுகிற சிவாலயத்தில் கீழ்க்கண்ட சிலாசாஸனம் (அதாவது) கல்வெட்டு காணப்படுகிறது:

சாலியவாஹன சகாப்தம் 1504 செல்லா நின்ற சித்ரபானு வருஷம் ஸ்வாமி கால கண்டேச்வரர் கோவிலிலே ஸ்ரீ கண்டபாஷ்யம் ஐநூறு வித்வாம்ஸர்களுககுப் படிப்பிக்க அதுக்கு சிவார்க்கமணி தீபிகை வ்யாக்யான மும் பண்ணி வேலூர் சின்னபொம்ம நாயகர் கையிலே கனகாபிஷேகமும் பண்ணிக் கொண்டு அதற்குப் பின் வேலூரிலே சிவார்க்கமணி தீபிகையும் ஐநூறு வித்வாம் ஸர்களுககு படிப்பிக்க ப்ருதிவிராஜ்யம் பண்ணிவிச்சி ந்யாயரக்ஷாமணி, கல்பதரு, பரிமள முதலான நூறு ப்ரபந்தம் பண்ணின அப்பய்ய தீக்ஷதருடைய க்ருதி இந்தி சிலா லயம். சுபமஸ்து.

அப்பய்யதீக்ஷதர்—ஸதாஸேவை
அருணகிரிதீக்ஷதர் ஸதாஸேவை
விஸ்வஜித அப்பய்யதீக்ஷதர் ஸதாஸேவை
உமாமஹேச்வரதீக்ஷர் ஸதாஸேவை
யக்ஞேஸ்வாதீக்ஷதர் ஸதாஸேவை
மருதாலாதிலக்ஷன் ஸதாஸேவை

இந்தக் கல்வெட்டில் அனேக பெயர்களும், ஸ்ரீ தீக்ஷிதருடைய பெயரும் ஸதாஸேவை, ஸதாஸேவை என்னும் வாசகத்தோடு எழுதி யிருக்கிறது. சாலிவாஹன சகாப்தத்தில் 378 வருஷங்களுக்கு முன் இது சுவற்றில் வெட்டப்பட்டதாகத் தெரிகிறது, இதில் அனேகம் பேர் முக்யமானவர்கள் கையெழுத் திட்டிருக்கிறார்கள். இதில் விச்வஜித் அப் பய்ய தீக்ஷிதர் என்று ஒருவரும், அப்பய்ய தீக்ஷிதர் என்று மற்றொருவரும் கையெழுத் துப் போட்டிருக்கிறார்கள். அந்த வெறும் அப்பய்ய தீக்ஷிதரைப் பற்றியே இங்கு விஷ யங்கள எழுதப்பட்டிருக்கின்றன. அதாவது வேலூரில் சின்ன பொம்ம நாயகன் என்று ஒரு ராஜா இருந்தான். அவன் மஹா சிவ பக்தன். தீக்ஷிதர் சாஸ்திர புஸ்தகங்களும், மஹாவிஷ்ணு, பரமேச்வரன் முதலியவர் களுடைய ஸ்தோத்ரப் புஸ்தகங்களுமாக நூறு புஸ்தகங்களுக்கு மேல் எழுதியிருக்கிறார். அவைகளைப் பார்த்து ஸந்தோஷமடைந்த அரசன் தங்கத்தினால் செய்த புஷ்பங்களால் அப்பய்ய தீக்ஷிதரை மூடும்படி பூஜித்தான், அதாவது அபிஷேகம் செய்தான். அந்த தங்கத்தைக் கொண்டு ஸ்ரீ காலகண்டேச்வர ருக்கு இந்தக் கோவில் கட்டினார். அதுமாத் திரமல்லாமல் இந்தக் கல்வெட்டில் எழுதி யிருப்பதும், தீக்ஷிதர் எழுதியதுமான பரி மளம், நியாயரக்ஷாமணி, சிவார்க்கமணி தீபிகை என்ற மூன்று புஸ்தகங்களில் சிவார்க் கமணி தீபிகையைப் பிரசாரம் செய்யவும் ஏற் பாடு செய்தார். பரிமளம், நியாயரக்ஷாமணி

இரண்டும் ஆதிசங்கராசார்யாள் செய்த ஸூத்ர பாஷ்யத்தின் அர்த்தத்தைத் தெளிவாகத் தெரிவிககும் படியாக உள்ள புஸ்தகங்கள். எந்த ப்ரும்மதத்வம் சிவன், விஷ்ணு என்ற பிரிவை அடைநதிருக்கிறதோ அநத நாமரூபமற்ற பரமாத்மஸ்வரூபத்தை ஆசார்யாள் சொல்லியிருக்கிருர்கள். ராமானுஜாசார்யார் விஷ்ணு பரமாக பாஷ்யம் பணணியிருக்கிருர். ஸ்ரீகண்டாசார்யார் சிவ தத்வத்தைப் பிரதானமாககொண்டு பாஷ்யம் பண்ணியிருக்கிருர். அந்த பாஷ்யத்துக்கு அப்பய்ய தீக்ஷிதர் ஒரு வியாக்யானம் எழுதியிருக்கிருர். அதற்கு சிவார்க்கமணி தீபிகை என்று பெயர். அந்த புஸ்தகத்திலே வேலூர் அரசனுடைய ஹிருதய குஹையிலே விளையாடிககொண்டிருககிற பரமேச்வரனுடைய ஆக்ஞையிலுலே நான் இந்த புஸ்தகம் எழுதுகிறேன் என்று எழுதியிருக்கிருர். மிகப் பெரிய புஸ்தகம் அது. சைவ சாஸ்த்ர நூல்களுக்கே ஆதாரமான புஸ்தகம்.

கனகாபிஷேகம் பண்ணின பணத்திலே கோவில் கட்டினுர். கோவில் கட்டினுல் மாத்திரம் போதாது என்று சாஸ்த்ரம் எழுதினுர். சாஸ்த்ரத்திலிருந்து தத்துவம் தெரியும். தத்துவம் தெரிந்தால் ஜனங்களுக்குப் பகதி வரும். பக்தியிருந்தாலதான் மேன் மேலும் கோவில் கட்ட முடியும். சாஸ்த்ரம் தெரியாதவர்களும் கோவிலிலே தெய்வ ஸாந்நித்யம் உள்ள ஸன்னிதியிலே போய் அனுகரஹம் பெற முடியும். சாஸ்த்ரம் என்கிற அஸ்திவாரத்தின் மேலேதான் கோவில் கட்ட வேண்டும். காங்கிரீட் அஸ்திவாரங்களெல்லாம் பிரயோஜனமிலலே. சாஸ்த்ரம் என்கிற அஸ்திவாரம்தான் முக்கியம். அது இருந்தால்தான் மேனமேலும் ஆலயங்கள் வளரும். அவ்விதமான சைவ சாஸ்ததிரங்களிலே அபபய்ய தீக்ஷிதருடைய சிவார்ககமணி தீபிகை சிகரம். ஆசார்ய பாஷ்யத்தை எல்லோரும் படிப்பார்கள். சைவ சாஸ்தரம் படிககிறவர்கள் மிகவும் குறைவு. அதனுல கனகாபிஷேகம் செய்த பணத்தில் 500 பேருக்கு வஸதி செய்துகொடுத்து, சிவார்க்கமணி தீபிகை படிக்கும்படியாகச் செய்தார். "ப்ருதிவீராஜ்யம் பண்ணி"—என்பதால் அந்த அரசன் ராஜ்ய பரிபாலனம் செய்வதற்கு இவர் மூலமாயிருந்தார் என்றும் தொனிக்கிறது. இந்த ஏற்பாடு செய்ததற்கு ஊரிலிருக்கிற பெரியவர்களும் சாக்ஷி எனபதற்கு ஸதா ஸேவை, ஸதா ஸேவை என்று கையெழுத்துப்போட்டு 378 வருஷஙகளுககு முன்பு இந்தக் கல்வெட்டு ஏற்பட்டிருககிறது.

ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வணவேதம் என்று நான்கு வேதங்கள். நியாயம், வைசேஷிகம், யோகம், ஸாங்க்யம், மீமாம்ஸை, வேதாந்தம் என்று ஆறு சாஸ்த்ரஙகள். தர்க்கம், வ்யாகரணம், மிமாம்ஸை, வேதாந்தம் என்று நான்கு சாஸ்த்ரங்கள் என்றும் சொல்வது உண்டு. வேதத்தின் முடிவாக உள்ள வேதாந்த சாஸ்த்ரம் முககியமானது. வேதாந்த சாஸ்த்ரத்திலே உயர்நத க்ரநதம் அத்வைதஸித்தி என்பது. அது வங்காள தேசத்தில் இருந்த மதுஸூதன ஸரஸ்வதி என்பவர் எழுதியது. அவர் ஸ்வாமிகள். அவரே ஸித்தாந்த பிந்து (அத்வைதஸித்தாந்தத்தினுடைய சொட்டு) என்று ஒரு சிறிய புஸ்தகத்தையும் எழுதியிருக்கிருர். அநத ஸித்தாநத பிந்துவிலே, தான் எதற்காக இநத க்ரநதம் பண்ணினேன் என்று கேள்வி கேட்டுக்கொண்டு, ஸமாதானமாக "वेदान्तश्रवणालसानां बोधाय कुर्वे कमपि प्रयत्नम्" வேதாந்த சாஸ்த்ரத்தைப் படித்து மனதில் வாங்கிக் கொள்வதற்குச் சகதியில்லாமல் சோம்பலுள்ளவர்களுக்கு அதைச் சுலபமாகத் தெரிந்து கொள்வதற்காக இந்த ஸிததாநத பிந்து எழுதுகிறேன் என்று அதில் சொலலியிருக்கிருர். மதுஸூதன ஸ்ரஸ்வதியின் அத்வைத ஸித்திககு வ்யாக்யானம் ப்ரம்மானந்தீயம். இதைக கௌட ப்ரம்மானந்தர் என்கிற வங்காளிக்காரர் செய்திருககிருர்.

ஸித்தாந்த பிந்துவுக்குப் பிந்துடீகை என்று அதே ப்ரும்மானந்தர் வ்யாக்யானம் எழுதியிருக்கிறுர். அதில் வேதாந்த சாஸ்த்ரம் என்றுல் ஸ்ரீ வேத வ்யாஸர் எழுதிய ब्रह्मसूत्रम् (1), அதற்கு ஸ்ரீ சங்கர பகவத் பாதாள் செய்திருக்கும் பாஷ்யம் (2), அதற்கு வாசஸ்பதி மிச்ரர் எழுதிய பாமதி என்கிற வ்யாக்யானம் (3), அதற்கு அமலானந்தர் என்பவர் எழுதிய கல்பதரு என்கிற வ்யாக்யானம் (4), கல்பதருவுக்கு அப்பய்ய தீக்ஷிதர் எழுதிய பரிமளம் என்கிற வ்யாக்யானம் (5). வ்யாஸ ஸூத்ரம் முதற்கொண்டு அப்பய்ய தீக்ஷிதருடைய பரிமளம் வரையிலுள்ள ஐந்து புஸ்தகங்களுக்குப் பெயர் வேதாந்த சாஸ்த்ரம். இவைகளில் உள்ள தத்வத்தை ஜலத்திவலை மாதிரி ஸித்தாந்த பிந்துவில் எழுதியிருக்கிறேன் என்று எழுதியிருக்கிறுர். வங்காளத்தில் இருந்த அக்காலத்து மஹான்கள் இந்த ஊரிலிருந்த அப்பய்ய தீக்ஷிதருடைய பரிமளத்தை வேதாந்த சாஸ்திரத்தின முடிவான நூல் என்று சொல்லியிருக்கிறுர்கள். அப்பய்ய தீக்ஷிதருக்கு நல்ல சிவபக்தி. இவர் தமது பாலயத்தில் சிஷ்யர்களுக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருக்கும்போது வயதான வரான ந்ருஸிம்ம ஆச்ரமிகள் வந்து 'நீர் ரொம்ப படிச்சிருக்கிறீரோ? என்னென்ன படிச்சிருக்கிறீர்?'' என்று கேட்டாராம். அதற்கு அப்பய்ய தீக்ஷிதர் சொன்ன பதிலாவது:—

"नाहमधीती वेदे न च पठिती यत्र कुत्रचिच्छास्त्रे ।
किन्तु दरेन्दुवतंसिनी पुरहंसिनि भूयसी भक्तिः ॥"

"நான் வேதம் நிருடி செய்தவனல்ல. ஒரு சாஸ்த்ரமும் நன்றுகப் படித்தவனல்ல. ஆனுல் பாலசந்த்ரகலாதரனும் புரஹானுமான பரமேச்வரனிடத்தில் நிறைந்த பக்தி ஒன்றே என்னிடம் இருக்கிறது'' என்று பதில் சொன்னுராம். ஆசார்யாளுடைய பாஷ்யம், பாமதி, கல்பதரு இவைகளை அப்பய்ய தீக்ஷிதர் பாடம் சொல்வதைக் கேட்டிருந்த ந்ருஸிம்ம ஆச்ரமிகள்,

"अप्पयदीक्षित किमित्यतिस्तुतिं
वर्णयामि भवतो वदान्यताम् ।
सोऽपि कल्पतरुरर्थसिद्धये
त्वद्गिरामवसरं प्रतीक्षते ॥"

'ஏ! அப்பய்ய தீக்ஷிதா! உன் வள்ளல் தன்மையை (கொடையை) என்னவென்று சொல்வேன். ஒருவனுக்குப் பொருள் வேண்டுமானுல் ப்ரபுவின் வாயைப் பார்த்து நிற்பான். எல்லோருக்கும் பொருளைத்தரும் கற்பக விருக்ஷம் அல்லது கல்பதரு பொருளுக்காக உன் வாயைப் பார்க்கிறது. உன் வள்ளல் தன்மையை என்ன சொல்வேன்!'' என்று சொல்லி கல்பதருவுக்கு வ்யாக்யானம் பண்ணு என்று ஆக்ஞைபிட்டார். அந்த ஆக்ஞையை அனுஸரித்து கல்பதருவுக்கு உயர்வைக் கொடுப்பது பரிமளமாதலால், பரிமளம் (வாஸனை) என்கிற வ்யாக்யான நூலை எழுதினுர். அந்த பரிமளத்தைத்தான் இந்த கல்வெட்டுக் குறிக்கிறது. அது பெரிய அத்வைதக்கிரந்தம். நியாயரக்ஷாமணியை எல்லோரும் படித்திருப்பார்கள். அதைவிடக் குறைவாகவே பரிமளம் படித்தவர்கள் இருப்பார்கள். சிவார்க்கமணி தீபிகையை பூராவும் படித்தவர்கள் மிகவும் சிலரே. அப்பய்ய தீக்ஷிதருடைய தம்பி பேரன் நீலகண்ட தீக்ஷிதர் மதுரையில் திருமலை நாயக்கரிடம் மந்திரியாக இருந்தார். மஹாமேதாவி அவர். அவர் அப்பய்ய தீக்ஷிதரை,

"श्रीकण्ठचरणासक्तः श्रीमानप्पयदीक्षितः ।
श्रीमती निर्मिता येन शिवार्कमणिदीपिका ॥"

திருநிறைந்த சிவார்க்கமணி தீபிகையைச் செய்தவர் என்று புகழ்ந்திருக்கிறுர். இதில் நல்ல சாஸ்த்ர விஷயங்கள் நிரம்பவும் இருக்கின்றன. பண்டிதர்கள் இதைத் தெரிந்து கொள்வதற்காகச் சில புஸ்தகங்கள் பைண்டு

செய்யப்பட்டுள்ளன. விஷ்ணு ஸ்தோத்ர க்ரந்தங்களும் எழுதியிருக்கிருர். இவ்வூரிலும் காஞ்சியிலும் பெருமாளுக்கு வரதராஜர் என்று பெயர். வரதராஜஸ்தவம் என்ற க்ரந்தம் செய்து அதற்கு வயாக்யானமும் செய்திருக்கிருர் தீக்ஷிதர். விரிஞ்சிபுரத்திலே மரகதவல்லி மார்க்கபந்து ஸ்தோத்ரம் செய்திருக்கிருர். திருவண்ணுமலை ஸமீபத்திலிருப்பதால் அபீதகு சாம்பாளை ஸ்தோத்ரம் செய்திருக்கிருர். சிதம்பரம் சென்று பிரதோஷ காலத்திலே திபாராதனை ஆகும்போது நடராஜாவைத் தர்சனம் செய்துகொண்டே அந்த ஜ்யோதிஸ்ஸில் கலந்துவிட்டார். அப்பொழுது இந்த ச்லோகம் சொன்னாராம்.

“ चिदम्बरमिदं परं प्रथितमेव पुण्यस्थलं
सुताश्च विनयोज्वला: सुकृतयश्च काश्चित्कृता: ।
वयांसि मम सप्ततेरुपरि नैव भोगे स्पृहा
न किंचिदहमर्थये शिवपदं दिदृक्षे परम् ॥ ”

“இந்த சிதம்பரம் ஸர்வலோக ப்ரஸித்தமான உத்க்ருஷ்டமான ஸ்தலம். பிள்ளைகள் எல்லோரும் வினயத்தோடும் பக்தியோடும் இருக்கிருர்கள். (104 புஸதகங்கள் எழுதியதை) ஏதோ சில புஸ்தகங்களும் எழுதியிருக்கிறேன். அல்பாயுளுமில்லை. எழுபது வயதுக்குமேலே எனக்கு ஆய்விட்டது. அது வேணும், இது வேணும் என்ற ஆசையுமில்லை. பரமேச்வரனுடைய பதத்தைப் பார்க்கவே ஆசைப்படுகிறேன்” என்ருர். அடுத்தபடி

“ आभाति हाटकसभा नटपादपद्म
ज्योतिर्मयो मनसि मे तरुणारुणोऽयम् ।

என்று இரண்டு பாதங்களைச் சொன்னார். தீபாராதனை ஆயிற்று. பக்கத்திலுள்ள சிஷ்யர்களின் மேல் சாய்ந்தார். பின் இரு பாதங்களை சிஷ்யர்கள் பூர்த்தி செய்தார்கள்.

नूनं जरामरणघोरपिशाचपूर्णा
संसारमोहरजनी विरतिं प्रयाता ॥ ”

ஸம்ஸாரம் என்கிற ஸ்வப்னத்திலிருந்து விழித்துக்கொண்டு விட்டார் என்று ஞானிகளான சிஷ்யர்கள் கோஷித்தார்கள். சிதம்பரத்திலே ஐக்ய மடைந்து, சிவார்க்கமணிதீபிகை பண்ணியிருந்தாலும், சிவன், விஷ்ணு என்ற பேதம் இவருக்குக் கிடையாது. சிதம்பரத்திலேயே நடராஜாஸன்னிதியில் ஒரு வாசற்படியில் நின்று பார்த்தால் நடராஜப் பெருமானையும் கோவிந்தராஜப் பெருமாளையும் ஒரே ஸமயத்தில் பார்க்கலாம். ஆங்கு நின்று கொண்டு, ஸ்தோத்ரம் செய்தார் :—

मारमणं उमारमणम्
फणधरतल्पं फणाधराकल्पम् ।
मुरमथनं पुरमथनम्
वन्दे बाणारिं असमबाणारिम् ॥

‘मारमणम्’ லக்ஷ்மியினுடைய நாதனான விஷ்ணுவையும், उमारमणम् பார்வதியின் நாதனான சிவனையும், फणधरतल्पम् பாம்புப் படுக்கையுடையவனையும், फणाधराकल्पम् பாம்புகளை ஆபரணமாகக் கொண்டவனையும், मुरमथनम् முரன் என்ற அஸுரனைக் கொன்றவனையும், पुरमथनम् த்ரிபுரத்தை எரித்தவனையும், बाणारिम् பாணஸுரனோடு சண்டை போட்டவரையும், असमबाणारिम् மன்மதனின் சத்ருவையும் वन्दे நமஸ்காரம் செய்கிறேன் என்ருர். பிறகு,

वस्तां पिशंगं वसनं दिशो वा
गरुत्मता यातु ककुद्मता वा ।
निद्रातु वा नृत्यतु वाडविरङ्गम्
नमेभिदा भाति परस्य पुंस: ॥

वस्तां பிசங்கம் वसनम् दिशो वा பீதாம்பரத்தை வஸ்திரமாகக் கட்டிக்கொள்ளட்டும், அல்லது திசைகளையே வஸ்திரமாக கட்டிக்கொள்ளட்டும். गरुत्मता यातु கருடன் மேலே ஏறி சென்ருலும் செல்லட்டும். ककुद्मता वा எருதுமேலேறி சென்ருலும் செல்லட்டும் ; निद्रातु वा தூங்கிக் கொண்டிருப்பவரோ नृत्यतु वाडविरङ्गम् மேடையில் நடனம் செய்கிறவரோ नमेभिदा भाति परस्य

पुंसः பரமபுருஷன் ஒருவனே, இதில் எனக்கு பேதமே தோன்றவில்லே என்று சொன்னுர். இரண்டு பேரும் ஸமம் என்று சொன்னுல் கூட, வஸ்து இரண்டு என்று ஆய்விடுமோ என்று ஸந்தேஹம் ஏற்படக்கூடாது என்பதற்காக இதில் எனக்குப் பேதமேயில்லே என்று சொன்னுர். சிவ பக்தி தவிர வேறு ஒன்றும் எனக்குத் தெரியாது என்றும் ந்ருஸிம்மாச்ரமிகளிடம் சொன்னுர். முடிவிலும் சிவனுடைய ஜ்யோதிஸ்ஸிலே ஐக்ய மடைந்த இவருக்கு விஷ்ணுவினிடத்திலே கொஞ்சமும் த்வேஷமில்லாத சிவபக்தி. அந்த பரமேச்வரன்தான் விஷ்ணு ரூபமாகவும் எல்லா ரூபமாகவும் இருக்கிருர் என்று அபேதத்தையும் காண்பித்தார்.

அதே மாதிரி

उद्घाट्य योगकलया हृदयाब्जकोशं
धन्यैश्चिरादपि यथारुचि गृह्यमाणः ।
यः प्रस्फुरत्यविरतं परिपूर्णरूपः
श्रेयस्स मे दिशतु शाश्वतिकं मुकुन्दः ॥

என்றும்,

यस्याहुरागमविदः परिपूर्णशक्तेः
अंशे कियत्यपि निविष्टममुं प्रपञ्चम् ।
तस्मै तमालरुचिभासुरकन्धराय
नारायणीसहचराय नमश्शिवाय ॥

என்றும், விஷ்ணுவையும் சிவனேயும் பரம்பொருளாகவே மங்கள ச்லோகங்கள் செய்திருக்கிருர். ஒருவரைப் பரிபூர்ண ரூபர் என்றும் மற்றவரைப் பரிபூர்ணசகதி என்றும் ஸ்தோத்ரம் செய்திருக்கிருர். அனேகமாக இந்த இரண்டு ச்லோகங்களேயும் எல்லா க்ரந்தங்களிலும் எழுதுகிருர். ஆனல் த்யானம் செய்வதோ ஆராதனம் செய்வதோ ஒன்றைத்தானே செய்யமுடியும். ஒரு நிமிஷம் அது, ஒரு நிமிஷம் இது என்ருல் எப்பொழுதும் உருளுங்கல (ரோலிங் ஸ்டோன்) மாதிரி ஆகிவிடும். அதனுலே பரமேச்வரனே ஸதா ஹ்ருதயத்தில் த்யானம் செய்து शिवपदं दिदृक्षे परम् என்று சிவபதம் அடைந்தார். குழந்தை முதல் 72 வயது வரை சிவபக்தியை அஸ்திவாரமாகக் கொண்ட இவர் சிவார்க்கமணி தீபிகையைச் செய்து, சிவாலயத்தைக் கட்டி, இவ்வளவு க்ரந்தங்களேயும் எழுதினுர். ராமானுஜ மதத்தை அனுஸரித்து எல்லாவற்றையும்விட அவர்களுடைய மதத்துக்கு அனுகூலமான கோடிகள் உள்ள நயமயூக மாலிகை என்ற புத்தகம் செய்திருக்கிருர். ராமானுஜ மதத்தில் இவ்வளவு உயர்ந்த புஸ்தகம் கிடையாது என்று அவர்களேச் சேர்ந்த வித்வான்களே சொல்லியிருக்கிருர்கள். மத்வ மதத்துக்கு அனுகூலமாக நியாய முக்தாவளி என்ற புஸ்தகம் எழுதியிருக்கிருர். சைவ மதத்துக்கு சிவார்க்கமணி தீபிகையைத்தவிர, நயமணிமாலே என்ற புஸ்தகமும் எழுதியிருக்கிருர்.

ஆசார்ய மதமான அத்வைதத்தின் தத்வத்தை போதிக்கும் நியாயரக்ஷாமணி, பரிமளம், ஸித்தாந்தலேசஸங்க்ரஹம், இவைகளேத்தவிர எல்லா வித விருத்தங்களுமடங்கிய வ்ருத்தரத்னுகரத்தைப் போன்ற நயமஞ்ஜரி என்ற வேதாந்த நூலேயும் இயற்றியிருக்கிருர். இவ்விதம் எல்லா மதத்துககும் புஸ்தகமெழுதி யிருப்பதால் அவருடைய தாராளமான மனது, உதாரஸ்வபாவம் தெரிகிறது. இதுவரையில் உள்ள பண்டிதர்கள் தன் மதத்தைப் பற்றியே புஸ்தகம் எழுதுவார்கள். மற்ற மதத்தைப் பற்றி புஸ்தகம் எழுத மாட்டார்கள். அவ்விதம் புஸ்தகமிருந்தாலும் அது வெளியில் வரக்கூடாதென்று நினேப்பார்கள். அத்வைதிகளில் இவர் மாதிரி வாசஸ்பதி மிச்ரர் என்று ஒருவர். அவருடைய க்ரந்தம்தான் பாமதி. அவர் காலத்தில் மத்வர் ராமானுஜர் இவர்கள் கிடையாது. யோகம், ஸாங்க்யம் என்று இரண்டு மதங்கள் பிரபலமாயிருந்தன. வைசேஷிகம் என்று ஒரு சாஸ்த்ரமும்

இருந்தது. வாசஸ்பதி மிச்ரர் தனது மத மான அத்வைதத்தைக்கண்டனம் பண்ணும் யோகம், ஸாங்க்யம், ந்யாய மதங்களுக்கும் அவர்களைக் காட்டிலும் அழகான யுக்தி களோடு புஸ்தகம் எழுதியிருக்கிறார். நன்கு தெரிந்து கொள்ளட்டும் என்ற அபிப்பிராயத் துடன். இதனால் இவர்களுடைய சாஸ்த்ர ஞானம், தாராளத்தன்மை தெரிகிறது என்பது மட்டுமில்லை. எந்த மதம் எவ்வளவு விருத்தி யானாலும், நம் அத்வைத மதத்துக்கு ஒரு குறைவும் ஏற்படாது. அது விருத்தியானால் அத்வைத மதத்துக்குப் போஷகமே என்ற திடநிச்சயம் அவர்களுக்கு என்பதும் தெரி கிறது. அதாவது விசிஷ்டாத்வைத மதத்தில் விஷ்ணு பக்தியைப் பிரதானமாகச் சொல் கிறது. அதனாலே அந்த விஷ்ணு பக்தி திருடமாகவந்தால் அந்த விஷ்ணுவே அத் வைத தத்வத்தைத் தானாக சொல்லிவிடுவார். சைவ மதத்தினால் த்ருடமான சிவபக்தி வரட்டும். அந்த சிவனே அத்வைததத்வத்தை பக்தர்களுக்குப் பிரகாசிக்கச் செய்வார் என்ற தீர்மானமான தைர்யம். சிவனோ விஷ்ணுவோ யாராயிருந்தாலும் தன் பக்தனுக்கு உணமை தத்வத்தைத்தானே சொல்லி அனுக்ரஹம் செய்வார். அது அத்வைத தத்வம்தான் என்ற திடநம்பிக்கை. அதனாலே அத்வைத தத்வத்தைக் கண்டிக்கிற சாஸ்திரங்களை யனு ஸரித்த புஸ்தகங்களைத் தானே இயற்றி பிர சாரம் பண்ணினார். தன் மதம் தவிர இதர மதத்துக்கு வேறு ஒருவரும் பெரிய க்ரந்தம் (Standard work) எழுதவில்லை. அத் வைத மதத்திலேயும் எத்தனையோ ஆயிரக் கணக்கான கரந்த கர்த்தாக்களில் இந்த இரண்டு பேர்களுக்குத்தான் இந்த தைரியம். ஒருவருககு மாத்திரம் இருந்தால் அவருக்த தைர்யமென்று சொல்லலாம். மற்றவருககும் இருப்பதாலே அத்வைத மதத்திலேயே உள்ள தைர்யம் என்று அர்த்தம். இவ்வளவு க்ரந் தங்களையும் செய்து அம்பாள், சிவன், விஷ்ணு, துர்க்கை முதலிய எல்லா ஸ்தோத்ரங்களையும் செய்திருக்கிறார். இவர் க்ரந்தங்களைப் பார்த் தால் இவர் எவ்வளவு நாள் தான் படித்தாரோ, எங்கேதான் படித்தாரோ, எங்கேதான் தேடி னாரோ, எப்படித்தான் எழுதினாரோ! 18 புரா ணங்களிலேயும் எல்லா சாஸ்த்ரங்களிலேயும் என்ன என்ன ஸூக்ஷ்ம தர்மங்கள் உண்டோ அதை யெல்லாம் சொல்லியிருக்கிறார். இப் பொழுது உலகத்திலுள்ள எல்லா விமர்சனங் களுக்கும் மேலாக எழுதியிருக்கிறார். தத் வத்திலேயே முழுகிக்கொண்டிருந்தார். இவர் 104 கிரந்தம் செய்திருக்கிறார். பரம சிவ பக்தர். சிவார்க்கமணி தீபிகை படிப்பதற்கு 500 பேருக்கு உபகாரம் செய்திருக்கிறார். வேதத்தில் சொல்லப்பட்ட ஸகல யக்ஞங்களை யும் அனுஷ்டானம் செய்திருக்கிறார். ஆனால் அத்வைத அனுபவம் உள்ளவர். இவ்வளவு ப்ரஸிததி பெற்றவர் என்பதனால் ஒரு சமயம் சிலர் அஸூயைப்பட்டு வெளியே போய்க் கொண்டிருக்கும்போது ஆட்களைகொண்டு இவரைத் தீர்த்துவிடுவதற்கு ஏற்பாடு செய் தார்கள் என்று கதை இருக்கிறது. வந்த ஆட்களைப் பார்த்தார் தீக்ஷிதர், यदि भवति महत्त्वं भस्मरुद्राक्षभाजां பஸ்மம், ருதராக்ஷம், சாஸ்த்ரம் இவைகளுக்கு ப்ராமாண்யமிருந்தால் எனககு இந்த ஆபத்து வரவேண்டுமா என்று பகவானை ஸ்தோத்ரம் செய்தார். திடீரென்று ஒரு இடி விழுந்து, அந்த சத்ருக்கள் பஸ்ம மாகிவிட்டனர். இப்பேர்பட்ட மஹானுடைய கண்ணில் பட்டுககொண்டே மரணம் ஏற் பட்டதால் அவர்களுக்கும் உத்தமகதிதான். இவ்வளவு சாஸ்த்ரங்களும் எழுதி ஆரம் பத்தில் சிவபக்தி, மத்யகாலத்திலே ஊமத்தங் காயைத்தின்று பைத்தியத்தை வரவழைத்துக் கொண்டு ஆத்மார்ப்பணஸ்துதி பண்ணி, ஆயுளின் முடிவில் 'சிவபதம் தித்ரு க்ஷேபரம்' என்று பூர்ண சிவபத்தியோடு எல்லா சாஸ்த்ரங்களிலும் பாண்டித்யத் தோடு இந்த ஊரிலே அப்பய்ய தீக்ஷிதர் இருந்தார்.

மத்வ மதத்தைப் பற்றி எழுதிய நியாய முக்தாவளி என்னும் புஸ்தகத்தின் ஆரம்பத்திலே

"आदावानन्दतीर्थीयामनुसृत्य मतस्थितिम् ।
न्यायमुक्तावली रम्या विशदार्था विरच्यते ॥"

என்றும், விசிஷ்டாத்வைத மதத்தைப்த்ற்றி எழுதிய புஸ்தகத்தில்

"श्रेयसां निधिमिव श्रियःपतिं
प्रेप्सतां प्रियहिताध्वदर्शिनी ।
लक्ष्मणार्यहृदयानुसारिणी
तन्यते नयमयूखमालिका ॥

என்றும், சைவத்தைப்பற்றி எழுதிய புத்தகத்தில்

"सोपानपङ्क्तिकल्पा सोमाभरणपदमारुरुक्षूणाम् ।
क्रियते नयमणिमाला श्रीकण्ठाचार्यदृष्टमार्गेण ॥"

என்றும், அத்வைதத்தைப்பற்றி எழுதிய புத்தகத்தில்

"आचार्यपाददर्शितमाशयमनुसृत्य सूत्रकृतः ।
अधिकरणमञ्जरीमहमारचयाम्यात्मबोधाय ॥"

என்றும் எழுதியிருக்கிறார். மத்வாசாரியாரைச் சொல்லும்போது ஆனந்ததீர்த்தர் என்று பெயரை மட்டும் குறிப்பிட்டார். ராமானுஜாசாரியாரைச் சொல்லும்போது 'ஆர்ய' என்ற பூஜ்யவாசகத்தைச் சேர்த்தார். ஸ்ரீ கண்டாசார்யாளைச் சொல்லும்போது அவர் பெயரோடு 'ஆசார்ய' என்ற பதத்தையும் போட்டார். பகவத்பாதாளைச் சொல்லும் போது பெயரையே சொல்லாமல் 'ஆசார்ய பாதாள்' என்று எழுதியிருக்கிறார். ஆனந்த தீர்த்தருடைய மதத்தை அனுஸரித்து எழுதுகிறேன என்றும், லக்ஷ்மணார்யருடைய ஹிருதயத்தை அனுஸரித்து எழுதுகிறேன் என்றும், ஸ்ரீ கண்டாசார்யார் கண்ட வழியை அனுஸரித்து எழுதுகிறேன் என்கிறார். ஆசார்யாளுடைய மதத்தை எழுதும்போது தனக்கு ஆத்மபோதம் ஏற்படுவதற்காக, ஆத்மஞானம் ஏற்படுவதற்காக, ஆசார்யாள் சொல்லியிருக்கும் ப்ரும்மஸூத்ரக்காரரான வ்யாஸமுனிவரின் அபிப்பிராயத்தை எழுதுகிறேன் என்று எழுதியிருக்கிறார். இதிலிருந்து ப்ரும்ஹ ஸூத்ரக்காரரின் அபிப்பிராயம் ஆசார்யாளுடைய பாஷ்யத்திலுள்ளதே என்று ஸ்திரப்படுத்திவிட்டார். முதலில் ஆனந்ததீர்த்தரின் மதம், இரண்டாவது ச்ரியப்பதியை அடைய ராமானுஜருடைய ஹ்ருதயம், மூன்றாவது சந்த்ரகலாதரனை அடைய ஸ்ரீகண்டாசார்யார் காட்டும் படிக்கட்டு, நான்காவது தனக்கு உண்மையின் தெளிவு, வியாஸர் ஆசார்யபாதாள் இவர்கள் கண்ட முடிவு. இவ்வளவு எதற்கு? எது ஸரியானதோ அந்த ஒரு மதம் போதாதா என்றால் அதற்கு,

"नानाभाष्यदृता सा सगुणफलगतिः
वैत्रविद्याविशेषैः
तत्तद्देशास्तिरम्या सरिदिव सकला
यत्र यात्यंशभूयम् ।
तस्मिन्नानन्दसिन्धौ अतिमहति फले
भावविश्रान्तिमुद्रा
शास्त्रस्य उद्घाटिता यैः प्रगमत हृदि
तान् नित्यमाचार्यपादान् ॥"

என்று ஸமாதானமாக எழுதியிருக்கிறார். அதாவது மத்வாசார்யார், ராமானுஜாசார்யார் ஸ்ரீகண்டாசார்யார் இவர்களெல்லாம் குணங்களோடும் ரூபத்தோடும் உள்ள ஈச்வரனை உபாஸித்து அந்த உபாஸனுபலமான அந்த ஸகுணமூர்த்திகளுடைய அனுக்ரஹத்தை அடைவதற்குப் பாஷ்யங்கள் பண்ணியிருக்கிறார்கள். உபாஸனைதுக்குப் பலன்; तत्तद्देशास्तिरम्या. ஒரு உபாஸனையினாலே வைகுண்டம் போகலாம். இன்னொரு உபாஸனையினாலே ஸாநதானிகலோகம் போகலாம். மற்றொரு உபாஸனையினாலே கைலாஸம்

போகலாம். தேவி உபாஸனே பண்ணிஞல் மணித்வீபம் போகலாம். இவைகளுக்குத் தான் நானா பாஷ்யங்கள். सरिद्व सकला மஹா நதிகளெல்லாம் ஸமுத்ரத்தில்தான் போய் முடியும். அதுபோல் இவ்வளவு ஸகுண பலங்களும் तस्मिन् आनन्दसिन्धौ பெரிய ஆனந்த ஸிந்துவில்தான் முடிகின்றன. ஆசார்ய பாஷ்யத்தில் அகண்டானந்த ஸ்வரூபம்தான் பிரகாசிக்கிறது. அது இல்லாது போனுல் எந்த சாஸ்த்ரத்துக்கும் விச்ராந்தி ஏற்படாது. மனது குறுகுறு என்று இருக்கும். அப்பாடா என்று விச்ராந்தியைக் கொடுப்பதுதான் பெரிய பலன். எல்லா சாஸ்த்ரங்களின் கருத்து. இந்த தத்வத்தை உடைய ஸ்ரீ ஆசார்ய பாஷ்யத்தை படிக்கவேண்டும். प्रणमत हृदि तान् அப்பேர்ப்பட்ட ஆசார்ய பாதாளே ஹ்ருதயத்தில் நமஸ்கரியுங்கள் என்று உத்திரவு போடுகிருர். எல்லா பாஷ்யங்களுடைய முடிவும் இதில்தான் என்று நிறுத்துப்போட்டு முடிவு கட்டிவிட்டார். வேறு எந்த சாஸ்த்ரக்காரரும் இவ்விதம் முடிவு கட்டவில்லே. எல்லா நதிகளுக்கும் ஸமுத்ர மாதிரி, எல்லா பாஷ்யங்களுககும் முடிவானது ஆசார்ய பாஷ்யம்தான். இதுதான் விச்ராந்தி முத்ரை. அவர்கள் பெயரைக் கூடச் சொல்லாமல் அவருடைய காலில் விழுந்து பக்திபண்ணி க்ஷேமத்தை அடையுங்கள். ஆசார்ய பக்தியிஞலே எல்லோருக்கும் ஸகல ச்ரேயஸும் ஸித்திக்கட்டும்.

பிடி அரிசி

'ஐயமிட்டுண்' என்பது தமிழ் மூதாட்டியான ஔவையின் அருள் வாக்கு. இதை ஒவ்வொரு குடும்பமும் பின்பற்றுவது நல்லது. ஒவ்வொரு நாளும் சமையலுக்காக உலேப் பானேயில் அரிசி போடும்போது, தர்மத்துக்கென்று ஒரு தனிப் பாத்திரத்தில் ஒரு பிடி அரிசியும், ஒரு காசும் போட்டுவைக்கவேண்டும். வாரத்துக்கு ஒருதரம் இந்த அரிசியை வசூல் செய்து ஓர் இடத்தில் சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்காக ஒவ்வொரு தெருவிலும் அல்லது வட்டத்திலும் ஒரு சங்கம் அமைத்துக்கொள்ளலாம்.

சேமிப்பு அரிசியை அந்தச் சங்கத்தின் மூலம் பக்கத்திலுள்ள கோயிலில் கொடுத்துச் சமைத்து பகவானுக்கு நிவேதனம் செய்ய வேண்டும். நிவேதனம் செய்த அந்த அன்னத்தைப் பட்டை போட்டு அந்த வட்டாரத்திலுள்ள ஏழை ஜனங்களுக்குக் குறைந்த விலேயில் 10-காசு வீதம் விற்கவேண்டும். இதில் கிடைக்கும் தொகையை விறகு வாங்குவதற்கு அல்லது கோயிலில் சமையல் செய்பவருக்கு ஊதியம் கொடுப்பதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த தர்மத்தைக் கடைப்பிடித்தால் ஏழை ஜனங்களுக்கு உபகாரமாக இருக்கும். பகவானுக்கு நிவேதனம் செய்த அன்னத்தை உட்கொள்வதிஞல் மனத்தில் நல்ல எண்ணங்கள் தோன்றச் செய்யும். இந்த தர்மத்திஞல், தர்மம் செய்பவர்கள், அதைப் பெறுகிறவர்கள் இருவருமே கடவுளின் கிருபைக்குப் பாத்திரர்களாகிருர்கள்.

ஊர் கூடித் தேர் இழுப்பதுபோல் எல்லோரும் இதைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தால் ஏழை ஜனங்களுக்குப் பேருதவியாக இருக்கும். பசித்தவனுக்கு உணவளிப்பதைவிட வேறு சிறந்த தர்மம் எது? நாம் கொடுப்பது பிடி அரிசி; அதில் எவ்வளவோ பேர் பலன் பெறுகிறுர்கள்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள்.



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள்

॥ श्रीः ॥

ஸ்ரீ பகவத்பாதரும் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரும்

[சாஸ்திர ரத்னாகர, பண்டிதராஜ, போலகம் ஸ்ரீ ராம சாஸ்திரிகள்.]

अद्वैतामृतमद्भुतं सुकृतिनो यः पाययन् वृद्मता-
माविर्भावयति प्रबन्धनिचयैर्वेदान्ततत्वार्थगैः ।
तं विष्णवीश्वर शक्ति सूर्य गणपस्कन्दाख्य षड्दैवतो-
पास्ति स्थापकमार्य शङ्कर मथाप्पय्यं भजे दीक्षितम् ॥
काञ्चीमण्डल मण्डन ममृतांशु कला धरावतरात्मा ।
द्राविडो भगवत्पादोपमो जयत्यप्पयाख्य मखिवर्यः ॥

திரவிட தேசத்தில் ஜனித்து சாந்தி சுகத்தையளிக்கும் ஔபநிஷதமான அத்வைத ஸித்தாநதத்தை ஸ்தாபித்து, உலக க்ஷேமததை யருளிய பெரியோர்கள் மூன்று பேர்கள். அம் மூவர்களில் முதல்வர் திராவிடாசாரியர் என்று ப்ரஸிததி வாய்ந்த மஹான். இவர் ப்ரம்மநந்தி என்பவர் இயற்றிய சாந்தோகயோபநிஷத்தின் விவரணமான வாக்ய க்ரந்தத்திர்க்கு பாஷ்யமியற்றியுள்ளார். அதில் சாந்தோக்யோபநிஷத்தில் கூறியபடி ஸகுண நிர்குண ப்ரம்ஹங்களின் ஸ்வரூபத்தை நன்கு விளக்கி அத்வைத சித்தாந்தத்தை போதித்துள்ளார். இவரை விசிஷ்டாத்வைத மத ப்ரவர்தக பூர்வாசார்யர் என்று கூட சிலர் கருதுகின்றனர். இவர் அத்வைத ஸ்தாபகாசார்யர்தான் என்று தக்க ப்ரமாணங்களுடன் நாம். "திரவிடாதரேய தர்சனம்" என்ற நூலில் விளக்கியுள்ளோம். வ்யாஸ பூஜையில திராவிடாசார்யரை. அத்வைத ஸன்யாஸிகள் பூஜிக்கிரபடியால் இவர் அத்வைதியே என்பதில ஸந்தேகமே இல்லை.

இரண்டாவது, சங்கரபகவத் பாதர். இவர் திராவிட தேசததைச் சேர்ந்த கேரளததில் அவதரித்து துறவறம் பூண்டு பாஷ்யாதி க்ரந்தங்களால் அத்வைத ஸிததாந்தததை ஸ்தாபித்து அதற்கு அங்கமாக சைவம், வைஷ்ணவம், முதலிய ஷண்மதங்களையும் ஸ்தாபித்து ஸ்ரீ காஞ்சியில் தனது ஆச்ரமத்தில் சித்தி அடைந்த விவரம். சிவரகஸ்யம் சங்கரவிஜயம் முதலியவைகளில் ஸ்பஷ்டம்.

மூன்ருவது ஸ்ரீ அப்பய்யதீக்ஷிதர், இவர் காஞ்சீ மண்டலததைச் சேர்ந்த அடையபலம் என்ற ஊரில் ஜனித்து 104 கிரந்தங்களை இயற்றி பரிமளம் முதலிய உயர்ந்த க்ரந்தங்களால் அத்வைத சித்தாநதத்தை நிலை நாட்டி அதற்கு அங்கமான வைதிக சைவத்தை சிவார்கமணி தீபிகை என்கிற ஸ்ரீகண்ட பாஷ்யத்தின் வ்யாக்யான மூலமாக ஸ்தாபித்து அத்வைத வித்யாசார்யர், ஸ்ரீ கண்டமத ப்ரதிஷ்டாபனாசார்யர், என்ற பிருதுகளை யடைந்தவர்.

இவர் த்வைதம், விசிஷ்டாத்வைதம், சிவாத்வைதம் அத்வைதம், என்ற நான்கு மதங்களிலும் உயர்ந்த க்ரந்தங்களை இயற்றி சதுர்மத ஸாமரஸ்யத்தை போதித்தவர். சிவனை ஜீவ கோடியில் சேர்த்துக் கூறும் தாந்திரிக வைஷ்ணவ மதத்தை நிராகரித்து சிவன் விஷ்ணு முதலிய மூர்த்தி பேதங்களை உடைய ஆறு உபாஸ்யமான தைவங்களையும் ப்ரம்ஹஸ்வ ரூபம்தான் என்று ஸ்ரீ சங்கர பகத்பாதரைப் போலவே போதிதது உபாஸனா மார்கங்களிலுள்ள கலகங்களை அகற்றியவர்.

ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரை பகவத் பாதரைப் போல சிவாவதாரம் என்றே சிவ ரகஸ்யம் கூறுகின்றது. திராவிட தேசத்தில் பிறந்து காஞ்சீ மண்டலத்தை அலங்கரிதத பகவத பாதரும் பகவத்பாதரைப் போன்ற மஹிமையுடைய ஸ்ரீ அப்பய்யதீக்ஷிதரும் அத்வைதாம்ருதத்தை ஸுக்ருதிகளுககுப் பல உயர்ந்த க்ரநதங்களால் பானம் செய்விதது ப்ரம்ஹ ஸ்வரூபமாகிர மோக்ஷத்தை இவ்வுலகிலேயே அளிதது உபகரித்தவர்களானபடியால் நாம் எல்லோரும் அவாகளை அனவரதம் தியானம் செய்து க்ருதார்த்தர்களாக ஆவோமாக.

சுபம்.

श्रीगुरुभ्यो नमः

अप्पय्यदीक्षितेन्द्रानशेष विद्यागुरूनहं वन्दे ।
यत्कृति बोधाबोधौ विद्वदविद्वत्प्रयोजकोपाधी ॥

சாஸ்திர ரத்னுகர பண்டிதராஜ. S. சுப்ரமண்ய சாஸ்திரி ஸர்வ கலாசாலே, மதருஸ்.

ஸகல வேத சாஸ்திரங்களையும் கற்றறிந்து பல சாஸ்திர நூல்களையும் எழுதி சிவ பாரம்யத்தை வேத மூலமாக ப்ரதிஷ்டை செய்து பாரத பூமி முழுவதும் பெரியார் எனப் பெயர் வாங்கியவர் ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷிதர். அவருடைய பௌதிக உடல் இவ்வுலகிலிருந்து பிரிந்தாலும் அவர் தன்னுடைய நூல்கள் மூலமாகவும், கீர்த்தி மூலமாகவும் இன்றும் நம்மிடையே இருந்துகொண்டு வசிக்கிறார். அவரை ஸாக்ஷாத் பரமேச்வராவதாரம் என்றே சிவரகஸ்யம் கூறுகிறது ஒரே தெய்வம் பிரம்ஹ விஷ்ணு, மஹேச்வர ரூபத்தை எடுத்துக்கொண்டு ப்ரபஞ்சத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்கிறது, ஆகவே சிவவிஷ்ணு பேதமில்லை என்பது அவருடைய தாத்பர்யம். ஆயினும், பரமேச்வரன் அவருக்கு இஷ்ட தேவதை அவரிடம் அவருக்கு பக்தி அதிகம். ஈச்வரானுக்ரஹத்தால்தான் அத்வைத வாஸனை உண்டாகும். ஆதலால் ஈச்வர ஸ்வரூபத்தை பரமார்த்தமாக அறிய அவர் ஸ்ரீகண்ட பாஷ்யத்துக்கு உரை எழுதினார். சிவ தத்வ விவேகம், சிவகர்ணாம்ருதம் ஆனந்தலஹரீ இவைகளில் சிவஸ்வரூபத்தை வாதம் செய்து நிலை நிறுத்தினார். சின்ன பொம்ம மஹாராஜாவால் தனக்கு செய்யப்பட்ட கனகாபிஷேகத்தின் நாணயங்களைக் கொண்டு தனது ஜன்மபூமியான அடையபலத்தில் சிவாலயம் நிர்மாணம் செய்து 500 வித்யார்த்திகள் சைவ க்ரந்தங்களைப் படிக்கும் பொருட்டு மான்யங்கள் விட்டார், வேதாந்த சாஸ்திரத்தின் முடிவான அத்வைதத்திலும் பரிமளம் சித்தாந்தலேசம், முதலிய நூல்களை செய்தார். அவருக்கு பிறமதத்தில் த்வேஷமில்லை த்வைத விசிஷ்டாத்வைத பரமாகவும் வேதாந்த ஸூத்ரங்களுக்கு உரை எழுதினார் மஹாவிஷ்ணுவிடம் தன் பக்தியை பெருக்கும் பொருட்டு வரதராஜஸ்தவம் எழுதினார் தேவியிடம் பக்தியால் அபீதகுசாம்பாள் ஸ்தோத்ரத்தையும் ஸூர்ய பக்தியால் ஆதித்ய ஸ்தோத்ர ரத்னத்தையும் இயற்றினார், அவர் எழுதிய நூல்களை சரிவர பயின்றவர்களே வித்வான்கள். பயிலாதவர்கள் வித்வான்கள் அல்ல என்று வ்யாகரண சாஸ்திரத்தில் மிகம் பெரியவர் என்று பாரதம் முழுவதும் புகழ் பெற்ற ஸ்ரீமான் பட்டோஜி தீக்ஷிதர் கூறுகிறார். ஸ்ரீ தீக்ஷிதருக்கு ஸ்ரீ சங்கர பகவத் பாதாளிடம் பக்தி அளவிட முடியாதது நாம் அவரை ஸ்மரிக்கும் கால் அவருடைய பித்ரு பக்தி, ஆசார்ய பக்தி, சிவ பக்தி, விஷ்ணு பக்தி சாஸ்திரங்களில் மேன் மேலும் உதிக்கும் ப்ரதிபா சக்தி, வேதத்திலும் வைதிக கர்மானுஷ்டானத்திலும் அளவு கடந்த ச்ரத்தை இவை எல்லாம் ஒருமிக்க மனதில் உதிக்கின்றன இவைகளில் சிலவற்றையாவது நமது சக்திக்கு தக்கவாறு நாம் அனுஷ்டித்தால் நாம் ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களின் கிருபைக்கு பாத்திரர்களாவோம்.

சுபம்.

॥ श्री शिवमयम् ॥

ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர்

"ரா. சி."

ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் ஸாக்ஷாத் பரமேச்வரனுடைய அவதாரம் என்பதை யாரும் அறிவார். ஸ்ரீ தீக்ஷிதர் வேலூர் அரசஞன சின்ன பொம்மனுடைய அவையில் ஆஸ்தானவித்வாஞக இருந்து ஸபையை அலங்கரித்துவந்தார். அந்த ஸமயம் "தாதாசாரியார்" என்ற வித்வானும் அரச ஸபையில் இருந்து வந்தார். தாதாசாரியர் தீவிரமான விஷ்ணு பக்தர் ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களுக்கோ சிவன் விஷ்ணு என்ற பேதமே கிடையாது. எல்லா மூர்த்திகளேயும் புகழ்ந்து பாடியும் எல்லா மதங்களிலும் க்ரந்தங்களே இயற்றியும் இருக்கிருர்.

ஸ்ரீ தீக்ஷிதருடைய புலமையையும் அவருக்கு அரசரிட மிருந்த மிகுந்த செல்வாக்கையும் கண்டு மிகவும் மனம் வெதும்பிஞர் தாதாசாரியார் ஸ்ரீ தீக்ஷிதருக்கு அவமதிப்பை உண்டாக்க பல வழிகளில் முயற்ச்சி செய்தும் ஒன்றும் பலனளிக்கவில்லே. சின்ன பொம்ம அரசனிடம் ஸ்ரீ தீக்ஷிதரைப் பற்றி அடிக்கடி அவதூறு சொல்லிவந்தார். அப்படியிருந்தும் ஸ்ரீ தீக்ஷிதர் பெருமையும் மஹிமையும் நாளுக்கு நாள் அதிகமாகிவந்தன.

கல்வியில் மிக மிக ஆர்வமுள்ள நரசிம்ம பல்லவன் என்னும் அரசன் ஸ்ரீ தீக்ஷிதரின் புலமையிஞல் ஆகர்ஷிக்கப்பட்டு அடிக்கடி அவரை தனது தேசத்திற்கு அழைத்து வித்வத் ஸபைகளேக் கூட்டி அனுபவித்து தகுந்த ஸம்மானங்கள் செய்து கௌரவித்து வந்தான். ஒரு ஸமயம் தாதாசாரியார் சின்ன பொம்ம ராஜாவிடம் கூறினதாவது "தஞ்சை அரசஞன நரசிம்மன் இவ்வளவு மரியாதையுடன் பொருள்களே வாரி வழங்கியும்கூட திருப்தி அடையாத தீக்ஷிதர் மறுபடியும் தன் சுகானுபவத்திற்காக சென்றது அவருடைய பேராசையை காண்பிக்கிரது" இதைக் கேட்ட சின்ன பொம்ம அரசனும் ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களின் மகிமையை வெளிக்காட்ட தக்க ஸந்தர்பம் உண்டாயிற்று என்று மனதில் தீர்மானித்துக்கொண்டு தாதாசாரியாரிடம் புன் சிரிப்புடன் கூறிஞர்." இப்பொழுது நரசிம்ம வர்மன் ஸ்ரீ காளஹஸ்திக்கு வருவதற்கு வேண்டிய ஏர்பாடுகள் செய்து கொண்டு இருக்கிருர். ஸ்ரீ தீக்ஷிதரும் அவருடன் வருவார் அது ஸமயம் எல்லாம் தெளிவாக விளங்கும் என்று கூறிஞர்.

பிறகு ஸ்ரீ சின்ன பொம்மன் தாதாசார்யருடனும் தனது பரிவாரங்களுடனும் ஸ்ரீ காளஹஸ்தி க்ஷேத்திரத்திற்கு வந்தார். ஸ்ரீ நரசிம்ம வர்மனும் ஸ்ரீ தீக்ஷிதருடன் காளஹஸ்தி வந்து சேர்ந்தார். இரண்டு அரசர்களும் மாலேயில் ஸ்ரீ காளஹஸ்தீச்வரர் ஸன்னிதியில் ஸந்தித்தார்கள் மறுநாள் காலே இரு அரசர்களும் ஸ்ரீ தீக்ஷிதருடன் ஸம்பாஷித்துக் கொண்டு இருந்தார்கள். தாதாசாரியாரும் உடன் வந்திருந்தார் என்பது கூறத்தேவையில்லே, ஸ்ரீ தீக்ஷிதர் எல்லோரையும் வரவேற்று நிதயப்படி செய்யவேண்டிய ஹோமாதிகளே ஆரம்பித்தார். தாதாசாரியாரின் மனதில் இருந்த ஈனத்தனமான எண்ணத்தை அறிந்து ஸ்ரீ தீக்ஷிதர் அக்னி பகவானேப் பார்த்துபின்வருமாறு ஸ்தோதரம் செய்தார். "ஹே அக்னி பகவானே. சுத்தமான ஆத்மாககளால் எனக்கு கொடுக்கப்பட்ட. ஸ்வர்ணம், பட்டு, முதலிய வஸ்துக்களால் அத்

வைத பாவத்துடன் நான் உனக்கு பூஜை செய்து இருந்தால் நீயும் அதை ஏற்றுக் கொண்டு இருப்பாயாகில் கருணை கூர்ந்து அல்பமனம் படைத்த எங்களுக்கு அதை காண்பிப்பாயாக என்று துதித்தார்.'' அந்த க்ஷணத்திலேயே, மூன்று அக்னிகளும் மிகுந்த ஜ்வாலையுடன் கூடினதாய் ப்ரகாசித்துக் கொண்டு இருக்கும் நேரத்தில் ஸ்ரீ யக்யேச்வரன் மஹாராஜாவால் அளிக்கப்பட்ட பட்டு ஆபரணங்கள் முதலியவைகளுடன் வெளித் தோன்றி காக்ஷியளித்து ஸ்ரீ தீக்ஷிதரை அனுக்ரஹித்து மறைந்தார். தன்னால் ஸ்ரீ தீக்ஷிதருக்கு கொடுக்கப்பட்ட உயர்ந்த பீதாம்பரங்கள், ரத்னஹாரங்கள், காந்தியுடன் கூடிய ஆபரணங்கள் அனைத்தையும் ஸ்ரீ தீக்ஷிதர் அக்னி பகவானிடம் ஸமர்பணம் செய்து யக்ஞேச்வரனை ஆராதித்து இருக்கிறார் என்பதையும் ஸ்ரீ தீக்ஷிதரிடம் உள்ள ஆசையற்ற தன்மையையும், பக்தியையும், கண்டு ஸந்தோஷத்துடன் ஸ்ரீ தீக்ஷிதரை வணங்கி ஆசி பெற்று இரு அரசர்களும் இருப்பிடம் சென்றார்கள். அப்பொழுது தாதாசாரியரின் மன நிலை எப்படி இருந்திருக்கும் என்றும் நாம் கூறவும் வேண்டுமோ !

॥ ॐ तत्सत् ॥

ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரின் அவதார ப்ரயோஜனம்

[உமையாள்புரம் V. S. ராமநாத தீக்ஷிதர்]

சிவாகஸ்யத்தில் சொல்லியபடி ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் என்பவர் ப்ரஸித்தி அடைந்த அவதார புருஷர். அவதாரங்கள் அனைத்தும் லோகோபகாரம் என்று பொருள் கொண்ட லோக ஸங்கரகத்தைப் ப்ரயோஜனமாகக் கொண்டது. ஆகவே அவாள் ஒரு ஆதர்ச புருஷாள். அவாள் லோகத்திற்குப் புரிந்த உபகாரங்களில் சிலவற்றை இங்கு குறிப்பிடுவோம். அவர்களுடைய பிருதுகளில் ஒன்றான, "அத்வைத வித்யாசார்யாள்'' என்கிற பெயர் அந்த உபகாரத்தை முக்கியமாக குறிக்கிறது. அத்வைத வித்யையானது ச்ருஷ்டிகர்த்தாவாகிய ப்ரம்ஹா முதல் நாளது தேதிவரை ஆசார்ய பரம்பரையாக விளங்கி வருகிறது. பகவத் பாதாள் உருவம் கொண்ட பரமேச்வரன் அதை சுத்தமான நிலையில் ப்ரகாசிக்கும்படி செய்து தனது அம்சபூதர்களான ஆசார்ய புருஷர்களையும் அவ்வப்போது உலகில் ப்ரகாசிக்கச் செய்தும் வருகிறார். சமீபத்தில் சுமார் 400 வருடங்களுக்கு முன் அடையபலம் என்னும் புண்ய க்ஷேத்திரத்தில் அவதரித்து, ஸ்ரீ தீக்ஷிதர் அத்வைத சாஸ்திரத்தை இல்லற வழிபாட்டில் உள்ள க்ரஹஸ்தர்கள் எவ்விதம் அனுஷ்டிக்கவேண்டியது என்பதை நன்கு விளக்கியுள்ளார். நமது அத்வைத பரம்பரையில் முக்கியஸ்தர்களான யாக்யவல்க்யர், வியாஸர் முதலிய ரிஷிகளும், வாசஸ்பதி முதலிய ஆசார்ய புருஷர்கள் அனைவரும் க்ரஹஸ்த தர்மத்தை கைவிடாமலே ப்ரம்ஹ வித்யையின் ப்ரசார மூலம் ப்ரம்ஹ சாக்ஷாத்காரத்தை அடைந்தது போல் நமது தீக்ஷிதரும் க்ரஹஸ்த தர்மத்தை கடைபிடித்து அதன் மேன்மையை தன் வாழ்நாளில் அனுஷ்டித்து காட்டியது இப்போதும் எப்போதும், நமது அத்வைத சாஸ்திரத்தை நடைமுறையில் வைத்திருப்பது ஸாத்யமாகும் என்பதற்கு ஒரு சான்றாகும்.

பிறவியிலேயே மஹான்களின் குலத்தில் உதித்தவர் ஏசகையிலும் பாரம்பர்ய

முறையை கைவிடாமல் மஹா வ்ரதம் முதலிய மஹா க்ரதுக்களைச் செய்து ப்ரம்ஹக் ஞானத்தை அடைந்து, அதிலும் பெருமை தாங்கிய “ அத்வைத வித்யாசார்யர் ” என்ற புகழையும் பெற்றார். அத்தகைய இந்த மஹான் எல்லா சாஸ்திரங்களிலும் நிகரற்ற பாண்டித்யத்தை ப்ரதிபலிக்கிற 104 க்ரந்தங்களையும் இயற்றி அழிவில்லாத புகழ் பெற்றார். இவர் ஸாமவேதமானாலும் க்ரந்தங்களில் குறிப்பிடப்பட்ட ரிக், யஜுர், ஸாம, வேதாதி பலசாகை மந்திரங்களும், ப்ராம்ஹணவாக்யங்களும், தரிசனங்களின் ரகஸ்யார்த்தங்களும் இவரது அஸாதாரணமான கல்விச் சிறப்பை நன்கு காண்பிப்பதாகும். மேலும் அத்வைத ப்ரஸ்தானங்களில் பூர்வாசார்யாளின் மத பேதங்களும் ஸூக்ஷ்மமானதும், அபூர்வமானதும் உள்ள ரகஸ்யார்த்தங்களை அதிஸுலபமாய் எளிய நடையில், மந்த மத்யமாதிகாரிகளுக்கும் புரியும்படியாக எடுத்துரைப்பதில் இவருக்கு ஸமம் இவரே யாவார் என்பதில் ஸந்தேகமில்லை. விசேஷமாயும் தனிச் சிறப்பும் வாய்ந்த இவர். அனுபவத்தையும் ஆங்காங்கு நன்கு விளக்கி இணையற்ற சிவபக்தியினால் ஈச்வர ப்ரஸாதத்தை சுலபமாக அடைய முடியும் என்பதையும் அவரது சீலத்தால் விளக்கி காட்டியுள்ளார்.

பரமாசார்ய பகவத் பாதாள் ச்ருதியின் அபிப்பிராயத்தை விளக்கும்போது ஸன்யாஸ நிஷ்டைதான் பிரம்ஹ வித்யை என்று கூறி சாந்தோக்ய விவரணத்தில். இல்லறத்தில் உள்ள க்ரஹஸ்தநாகிலும் அத்வைதத்தை உணர்ந்தவன் ஸன்யாஸியே என்று குறிப்பிடுகிறார் இதற்கு உதாஹரணம் ஸமீபகாலத்தில் ஸ்ரீ தீக்ஷிதரே ஆவார் என்று சொல்வதற்கு ஐயமில்லை. மற்றும் நமது தீக்ஷிதர் சோழநாட்டில் அவதரித்தது இந்த மண்டலத்தையே புனிதமாக்கும் என்பதிலும் அவரது புண்யத்தின் கந்தம் இங்கு வஸிக்கும் ஜீவராசிகளுக்கும் புண்ய வாஸனையை உண்டாக்கும் என்பதிலும் ஸந்தேகம் இல்லை.

இவர் இயற்றிய 104 க்ரந்தங்களுள் இறுதியில் செய்யப்பட்ட அத்வைத வேதாந்த நூலான “ நியாய ரக்ஷாமணி ” என்பதுதான் எல்லாவற்றிற்கும் முதன்மையாக விளங்குகிறது. இந்த மஹான், தர்கம், வ்யாகரணம், மீமாம்ஸை, அலங்காரம் முதலிய சாஸ்திரங்களில் தனது அபாரமான பாண்டித்யத்தை நிரூபிக்கும் வகையில் க்ரந்தங்கள் எழுதி, பூர்வாசார்யர்களால் எழுதப்பட்டு இருக்கும் அபிப்பிராயங்களை ஒருமைப்படுத்தி அதிஸுலபமாக புரியும்படி செய்து இருக்கிறார். இந்த ஒரு க்ரந்தமே வேதாந்த வாக்யங்களின் பொருளை ஸந்தேகத்திற்கு இடமில்லாமல் விளக்குகிறது. விசேஷமாய் ஆனந்த மயாதிகரணத்திலும், தஹர தேவதாதிகரணத்திலும் இணையற்ற ரகஸ்யங்களையும் விஸ்தாரமாக ப்ரதிபாதனம் செய்துள்ளார். பூர்வோத்தர மீமாம்ஸைகளில் உள்ள நுணுக்கமான கடினமான பாகங்களை நன்கு புரியும்படி வ்யாகரண அலங்கார சாஸ்திர மர்மங்களையும் ஆங்காங்கு நன்கு விளக்குகிறார். ஒவ்வொரு அதிகரணத்திலும் வசன நடையிலும் செய்யுள் ரூபமாயும் பூர்வபக்ஷ ஸித்தாந்த பாகங்களை நன்கு விவரிப்பதும் இவரது அஸாதாரண முறையாகும். நமது சோழ நாட்டில் நாம் எல்லோரும் பெருமை கொள்ளவேண்டிய விஷயம். அவரது அவதாரத்தின் மஹிமை, உபகாரம் இவைகளை நன்கு உணர்ந்து அவரது வழியில் ப்ராம்ஹண குலம் முயற்சித்து அந்த தீபத்தை அணையாமல் காப்பாற்றுவதேயாகும். நாளது தேதிவரை அத்வைத வித்யையும், அத்வைத பரம்பரையையும் வளர்த்து வருவது ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களின் சிஷ்யர்களே யாவர். வடநாட்டில் பிரஸித்தியுடன் விளங்கின ஸ்ரீ பட்டோஜி தீக்ஷிதரும் ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களையே குருவாகக் கொண்டதும் அதிசயமில்லை. இத்தகைய பெருமை வாய்ந்த ஸ்ரீ தீக்ஷிதர் ஜயந்தி விழாவை நாம் கொண்டாடுவது நம் கடமையாயினும் அவர்கள் வகுத்த வழியை

பின்பற்றி அவரது க்ரந்தங்களை ப்ரசாரத்தில் கொண்டுவருவது பாரத தேசத்தில் உள்ள ஆஸ்திக ஜனங்கள் அனைவரின் கடமை யாகும். அவரது வம்சத்தைச் சேர்ந்தவர்கள் பெருமையுடன் அவரது புகழ் சரீரமாகிய க்ரந்தங்களை ப்ரசாரம் செய்து கீர்த்தி அடை வார்கள் என்று நாமும் அவர்களை கோரு கிறோம். அனாதிகாலமாக தொடர்ந்து வரும் நமது அத்வைத பரம்பரையை காப்பாற்றி வரும் தர்ம ஆசார்யாளுக்கும், அவரது ஆக்ஞைபடி க்ரந்தங்களைக் கற்று ப்ரசாரம் செய்துவரும் பண்டித பரம்பரைக்கும் எனது அஞ்சலியைத் தெரிவிக்கிறேன்.

சுபம்!

ஸ்ரீ:

ஸ்ரீகாலகண்டேச்வராய நம:

அவதார புருஷர் ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர்

பலாசூர் ஸ்ரீ குப்புஸ்வாமி சாஸ்திரிகள்

"சோழ நாடு சோறுடைத்து சான்றோர் உடைத்து தொண்டை மண்டலம்" என்ற ப்ரஸித்தியை யாரும் அறிந்திருப்பார்கள். நமது பாரத பூமிக்கே காஞ்சீ க்ஷேத்திரம் நாபீஸ்தானமாக விளங்கி வருகிறது. ஆகவே தான் கேரளத்தில் பகவத் பாதாள் அவதரித்த போதிலும் தொண்டை நாடான காஞ்சீ க்ஷேத் திரத்தில் ஸர்வக்ஞ பீடாரோஹணம் செய்து காஞ்சியிலேயே ஸித்தி அடைந்தார்கள். அத் தகைய பெருமை வாய்ந்த காஞ்சீ மண்ட லத்தில் அடங்கிய அடையபலம் என்னும் கிராமத்தில் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவதரித்து 104 க்ரந்தங்களை இயற்றி லோகோபகாரம் செய்து இருக்கிறார். சிவ விஷ்ணு பேதமே இவருக்கு கிடையாது. இந்த மஹானுடைய ஸ்மரணத்தால் நமக்கும் அபேத புத்தி உண் டாகி சாந்தி ஏற்படும் என்று நம்புகிறேன்.

ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களின் பிதாமஹர் ஆசார்ய தீக்ஷிதர், பிதா ஸ்ரீ ரங்கராஜ தீக்ஷி தர் இவர்கள் இருவரும் மஹாவித்வான் கள் அத்வைத வித்யா முகுரம் முதலிய நூல் களை இயற்றியவர்கள். ஸ்ரீ தீக்ஷிதர் அவர் கள் தனனுடைய தகப்பனாரிட மிருந்தே ஸகல சாஸ்திரங்களையும் கற்று ஸகல யாகங்களை யும் செய்து ஸ்ரீ பகவத் பாதாள் பாதையில் சென்று, கர்ம, பக்தி, க்ஞான, மார்கங்களை நிலை நிறுத்தி சிதம்பரத்தில் ஸ்ரீ சித்ஸபா நாயகனிடத்தில் ஜோதியில் கலந்தார்,

ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் ஜ்யோதிஷ்டோம யாகம் செய்யுங்கால் ஒரு நாஸ்திக கூட்டம் அங்கே வந்து இப்படிப்பட்ட ஹிம்ஸாத்மக மாக கார்யத்தை செய்யலாமா? மாம்ச ஆசை யினால்தான் நீங்கள் யாகம் யென்ற பெயரில் இதைச் செய்கிறீர்கள் என்று சொன்ன செய்தி ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களின் காதில் பட்ட மாத்திரத்தில் பகவான் யக்ஞேச்வரனை துதித் தார். உடனே ஹோமகுண்டங்களிலிருந்து பசுக்கள் (ஆடுகள்) முன் இருந்ததைவிட அதிக புஷ்டியுடன் வெளி வந்தன. இதைக் கண்ட நாஸ்திகக் கூட்டம் பயந்து நடுங்கி ஸ்ரீ தீக்ஷிதர் பாதங்களில் விழுந்து மன்னிப்பு பெற்று சென்றார்கள்.

சாஸ்தாவின் விளக்கம்

ஹரி ஹர புத்திரன் என்று சொல்லப்படுபவர் "ஸ்ரீ மஹாவிஷ்ணு மோஹினி அவதாரம் எடுக்கும் ஸமயம் மோஹினி ரூபம் கொண்ட ஸ்ரீ மஹாவிஷ்ணுவுக்கும், ஸ்ரீ பரமேச்வரனுக்கும் உண்டானவர் சாஸ்தா.

ஸ்ரீ தீக்ஷிதர் சின்ன பொம்ம மஹாராஜா உடன் தஞ்சை சென்று இருந்தார். அப்பொழுது ஸ்வாமி தரிசனம் செய்யும் பொருட்டு ஸ்ரீ தீக்ஷிதருடன் மஹாராஜா தேவாலயம் சென்றூர். அதே ஸமயம் ஸ்ரீ தாதாசாரியுடன் நரசிம்ம பூபால மஹாராஜாவும் அங்கு வந்து சேர்ந்தார். ஸ்ரீ சாஸ்தாவின் பிம்பம் ஆள் காட்டி விரலை மூக்குமேல் வைத்துக்கொண்டு பிரகாசித்துக்கொண்டு இருக்கும் ஸமயம் இந்த பிம்பம் ஏன் இப்படி மூகுகு மேல் விரல் வைத்திருக்கவேண்டும் என்று கேழ்க்க பக்கத்தில் உள்ள ஜனங்கள் பின் வருமாறு கூறினூர்கள். "ஒரு மஹான் இங்கு வருவார் அவர் இந்த பிம்பத்தின் ரகஸ்யத்தை வெளிப்படுத்துவார். அப்பொழுது இந்த பிம்பம் தன் ஆள் காட்டி விரலை எடுக்கும் என்று பெரியோர்கள் சொல்லி கேட்டு இருக்கிறேன் என்று சொன்னூர்கள்" இதைக் கேட்ட நரசிம்மபூபாலன் ஸ்ரீ தாதாசாரிடம் இதன் ரகஸ்யத்தை வெளிப்படுத்தும்படி பிரார்த்திக்க தாதாசாரியார் கீழ்வருமாறு கூறினூர்.

विष्णोः सुतोऽहं विधिना समोऽहं
धन्य स्ततोहं सुर सेवितोऽहम् ।
तथापि भूतेशसुतोऽहमेतैर्भूतैर्वृत-
श्चिन्तयतीह शास्ता ॥

நான் விஷ்ணுவுக்கு மகனுய் இருந்தும் ப்ரம்ஹாவுக்கு ஸமமாக இருந்தும் தேவதைகளால் வணங்கப்பட்டவனுய் இருந்தும் பரமசிவனுடைய மகனுக இருப்பதால் இந்த பூத கணங்களுடன் சேர்ந்து இருக்கவேண்டியிருக்கிறதே என்று யோசிக்கிரது சாஸ்தா என்று கூறினூர். சாஸ்தா விரலை எடுக்கவில்லை ஸ்ரீ சின்ன பொம்ம மஹாராஜா ஸ்ரீ தீக்ஷிதரிடம் இதன் ரகஸ்யத்தை விளக்கும்படி ப்ரார்தித்தான்.

अम्बेति गौरीमह माह्वायमि पत्न्यः
पितुर्मातर एव सर्वाः ।
कथन्नु लक्ष्मीमिति चिन्तयन्तं
शास्तारमीडे सकलार्थसिद्ध्यै ॥

நான் கைலாஸம் சென்ருல் ஸ்ரீ பார்வதீ தேவியை அம்மா என்று அழைப்பேன் அப்பாவின் மனேவி அம்மா, எனக்கு தந்தை பரமசிவன், அவர் மனேவி பார்வதீதேவி, இதில் ஸந்தேகமில்லை வைகுண்டம் சென்ருல் ஸ்ரீ லக்ஷ்மீதேவியை எப்படி அழைப்பது? நானே மோஹினீ ரூபம் உள்ள விஷ்ணுவின் மகன் ஆகவே எனக்கு அம்மா விஷ்ணு, விஷ்ணுவின் மனேவி லக்ஷ்மி, அம்மாவின் மனேவியை என்ன பெயரிட்டு அழைக்கிரது என்று சாஸ்தா யோசிக்கிறது என்று கூறினூர் ஸ்ரீ தீக்ஷிதர், உடனே சாஸ்தா விரலை எடுத்து விட்டது. அங்கு கூடி யிருந்த மஹா ஜனங்களும் ராஜாக்களும் ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களின் பெருமையை உணர்ந்து வணங்கி ஆசி பெற்றூர்கள்.

விஷபானம்

இவ்விதம் ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் பெருமை நாளுக்கு நாள் வளருவதைக் கண்ட சிலருக்கு தீக்ஷிதரிடம் பொருமையும் வளர்ந்து வந்த ஸமயம் தீக்ஷிதருக்கு விஷம் கொடுத்துவிட வேண்டும் என்று தீர்மானித்தார்கள். ஸ்ரீ தீக்ஷிதர் விஷ்ணு தரிசனத்திற்கு தேவாலயம் வரும் ஸமயம் தீர்த்தப்ரஸாதத்தில் விஷத்தை கலந்துகொடுத்து விடுவதற்கு ஸ்ரீ பட்டாச்சாரியுடன் கலந்து யோசித்து ஏர்பாடுகளை செய்திருந்தார்கள். ஸ்ரீ தீக்ஷிதரும் தினம் போல் மாலை தரிசனத்திற்கு தேவாலயம் சென்ற ஸமயம் ராஜாவும் வந்திருந்தார்.

பட்டாச்சாரியாரும் ஏர்பாட்டின்படி ஸ்ரீ தீக்ஷித ருக்கு என்று தயாரித்த விஷத்துடன் கூடின தீர்த்தத்தை கொடுக்க தீக்ஷிதரும் வாங்கி நீல கண்டனை த்யானம் செய்து, துதித்து, சாப் பிட்டார். அந்த விஷம் கழுத்துக்கு கீழ் செல்லாமல் அங்கேயே நின்று கழுத்தும் கருத்துவிட்டது. உடனே ராஜாவும் விஷ யத்தை ஸந்தேகமாக தெரிந்துகொண்டு பட்டாச்சாரியாரை விசாரிக்க அவரும் நடந்த தைச்சொல்லி நான் இப்பேர்பட்ட மஹா னுக்கு செய்த அபசாரத்தை பொருக்கவேண் டும் என்று ஸ்ரீ தீக்ஷிதரை சேவிக்க அவரும் பட்டாச்சாரியாரை அனுக்ரஹித்தார்கள். ஹால காலம் உண்ட பரமேச்வரனுடைய அவதார பூதாளான ஸ்ரீ தீக்ஷிதர்வாளிடம் இந்த விஷம் என்ன செய்யமுடியும் என்று அங்குள்ள மக்களும், ராஜாவும் தீக்ஷிதரை புகழ்ந்து தரிசனம் செய்து ஆசி பெற்றார்கள். ஆகவேதான் ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களும் தன் ஜன்மபூமியான அடைய பலத்தில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டு வழி பட்டு வந்த ஸ்வாமிக்கும் ஸ்ரீ காலகண்டேச்வரர் என்ற திருநாமத் தையே சூட்டினார்போலும், அப்பேர்பட்ட ஸ்ரீ காலகண்டேச்வர ஸ்வாமியின் சரணார விந்தங்களிலும் ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களின் சரணார விந்தங்களிலும் என்னுடைய அனந்த கோடி பிரணாமங்களை ஸமர்பணம் செய்து கொள்கிறேன்.

சிவம்.

With compliments

NEO ART PRESS, 53, Wallajah Road, Madras-2.

Telephone: 83826

ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் அருளிய

பஞ்சரத்ன ஸ்துதி

[தர்மஞ்ய, ராமநாத தீக்ஷிதர்]

भूतस्य जात इति वारिरुहासनस्य जातो बृहन्निति हरेश्च जनिः प्रसिद्धा ।
यस्मादजात इति मन्त्रवरोपदिष्टात् तं रुद्रमेव जनितः चकितः प्रपद्ये ॥ 1 ॥

மனிதனுகப் பிறப்பது பல ஜன்மங்களில் செய்த புண்யங்களின் பலனுகும். அவ்விதம் மனிதப் பிறவி எடுத்த ஒவ்வொருவனும் மறு பிறவி இல்லாத (மோக்ஷத்தை) அடைய விரும்புவதும் இயற்கையே, பிறப்பின்மையை வேண்டும் நான் பிறப்பற்ற பரமேச்வரனையே சரணமடைகிறேன்.

उक्त्वा प्रसूतिमज शौरि हरेश्वराणां संसूच्यदीपक सहोक्तिभिरन्यनिघ्नाम् ।
तां सन्यधारयदथर्वशिखाहिमस्य तं सर्वकारणमनादिशिवं प्रपद्ये ॥ 2 ॥

பிரம்ஹா, விஷ்ணு, ருத்ரன் இவர்களுக்கு உற்பத்தியைக் கூறிவிட்டு, அந்த உற்பத்திவேறு இடத்திலிருந்து ஏற்படுவதாக தீபகாலங்காரத்தினுலும், ஸஹோக்தி அலங்காரத்தினுலும் சூசனம் செய்து (தெரிவித்து) அவ்விதமுள்ள உற்பத்தி எந்த பரமசிவ னிடமிருந்து ஏற்படுவதாக அதர்வசிகா உபநிஷத் கூறுகிறதோ எல்லாவற்றிற்கும் காரணமான ஆதியற்ற அந்த பரமசிவனை சரணமடைகிறேன்.

वेदान्तेषु प्रथम भवनं वर्णितं यस्य याभ्यां
तद्वृत्तस्य प्रसववचसा जन्म तत् ख्यापयित्वा ।
यस्यैकस्य स्फुटमजनिता निश्चिता कारणस्य
ध्यायामस्तं जनिविहितये शम्भुराकाशमध्ये ॥ 3 ॥

பிரம்ஹா, விஷ்ணு, ருத்ரன் முதலிய தேவர்கள் பரமசிவனிடமிருந்து உண்டானுர்கள் என்பதை ச்ருதி, ஸ்மிருதி, நியாயங்களைக்கொண்டு விளக்கினுர்கள் "एकोहवै नारायण आसीत् नब्रह्मा नेशानः" முதலிய வேத வாக்யங்களில், நாராயணன் பிரம்ஹ ருத்ரர்களைக் காட்டிலும் முதலில் இருந்ததாக தெரிகிறதே அவருக்கு பரமசிவனிடமிருந்து உற்பத்தி எப்படி பொருந்தும்? என்ற ஆக்ஷேபமும் எழுகிறது. இந்த ஆக்ஷேபத்திற்கு அதர்வசிகை உபநிஷத்தின் மூலம் இந்த ச்லோகத்தில் சமாதானம் செய்கிருர். "एकोहवै नारायणः आसीत्" என்ற உபநிஷத் வாக்யத்தில் ப்ரம்ஹா ருத்ரன் இவர்களைக் காட்டிலும் முன்பே நாராயணன் இருந்தார் என்று கூறுகிறது. அதுபோல் "ब्रह्मविष्णु रुद्रेन्द्रास्ते संप्रसूच्यन्ते" என்ற அதர்வசிகா உபனிஷத்தில் பரமசிவனிடமிருந்து. ப்ரம்ஹா, விஷ்ணு, ருத்ரன் முதலியவர்கள் உண்டாகிருர்கள் என்று விஷ்ணுவிற்கு உற்பத்தியை கூறியிருக்கிறது. ஆகையால் "एको हवै नारायणः आसीत्" என்பதற்கு நாராயணன் முதலில் உண்டானுர் என்றே கூறவேண்டும். பரமசிவ

னுக்கு உற்பத்தி இல்லை என்பது முன் சொன்ன காரணங்களைக் கொண்டு ஸ்பஷ்டமாக நிச்சயிக்கப்பட்டு இருக்கிறது. ஆகையால் ஜனன ரூபமான க்லேசம் வராமல் இருக்கும் பொருட்டுஹ்ருதயாகாசத்தில் சம்புவான பரமசிவனை த்யானம் செய்கிறேன்.

यद् भ्रूभंगैकवश्याविधिहरि गिरिशख्यातिदाश्शक्तिकोट्य:
यद्भृत्यादेवदेवास्सकल भुवनगास्सन्नियच्छन्ति विश्वम् ।
यल्लिंगं सर्व देवासुर मनुज मुखै रर्च्यंते विश्वरूपम्
तस्मै नित्यं नमस्यां प्रवितनुत परब्रह्मणे शंकराय ॥ 4 ॥

ஒன்பது கோடி ருத்ர சக்திகளும், பதினெட்டு கோடி விஷ்ணு சக்திகளும், ஆனந்தமான பிரம்ஹ சக்திகளும் உலகில் உள்ள தீங்கை நீக்கி நன்மையைக் கொடுக்கின்றன. பரமசிவன் இவ்வளவு உருவங்களை எடுத்துக் கொண்டு முன்சொன்ன சக்திகளுக்குப் பதியாக விளங்குகிறார். அத்தகைய பரப்ரம்ஹரூபியான சங்கரனுக்கு நமஸ்காரங்களைச் செய்யுங்கள்.

आस्तां सूक्ष्मं लिङ्गरूपत्वलिङ्गेस्याद्ब्रह्मेशानाख्ययैवाल्पमात्रम् ।
इत्येतेनावेदयत्सूत्रकारो यं ब्रह्माख्यं तं प्रपद्ये महेशम् ॥ 5 ॥

ஸூக்ஷ்ம திருஷ்டியினால் வேறு உபநிஷத்துகளை கவனித்து லிங்க ரூபமாக உலகத்திற்கு காரணமாக இருப்பது என்று லிங்கத்தைக் கொண்டு தீர்மானிப்பது இருக்கட்டும். "ஈசன" என்று பரமசிவனுக்கே உரியதான சப்தத்தைக் கொண்டே அல்ப (கட்டை விரல) அளவுள்ள ஜீவனை ப்ரம்ஹம் என்று சொல்லலாம் என்று பிரம்ஹஸூத்ரகாரரான வ்யாஸர் "ஏவ" காரத்தினால் லிங்கம் இருப்பதாகவும் இருந்தாலும், அதை எதிர்பாராமலே. "ஈசான:" என்ற சப்தத்தினால் ஜீவனை ப்ரம்ஹமென்று தீர்மானிக்கலாம் என்று லிங்கம் இருப்பதாக எவரைப்பற்றி தெரிவிக்கின்றாரோ. அந்த ப்ரம்ஹரூபியான பரமேச்வரனை சரணமாக அடைகிறேன்.

With the best compliments of:

VENKATAKRISHNA CAFE

COFFEE & MEALS HOTEL

MARKET ROAD, ARNI.

शिवाय नमः

ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் அருளிய

॥ श्रीमार्ग बन्धु पञ्चरत्नमाला ॥

ஸ்ரீ பரமேச்வரனுடைய அவதாரமாக விளங்கிய ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்களுடைய ஒப்பற்ற கல்வி, அனுஷ்டானம், முதலியவைகளைக்கண்டு அசூயை அடைந்த சில பிறமதஸ்தர்கள் அவருடைய உடலுக்கு ஆபத்தை உண்டாக்கவேண்டும் என்று எண்ணி சில தூர்த்தர்களை ஏவி தீக்ஷிதர் அவர்கள் செல்லும் மத்ய மார்க்கத்தில் ஆபத்தை உண்டாக்கும்படி செய்தார்கள். அஸ்தமன ஸமயம் அனுஷ்டானத்திற்கு நதிக்குச் செல்லும் போது அந்த தூர்த்தர்கள் ஸ்ரீ தீக்ஷிதரை மடக்க எண்ணியதை சில துர்நிமித்தங்களால் அறிந்த தீக்ஷிதர் அவர்கள் பின்வரும் ஐந்து ச்லோகங்களால் துதித்தார்கள். ஈச்வரன் அவரது துதிக்கு இணங்கி மார்க்கஸஹாயனுக வந்து தூர்த்தர்களை விரட்டி அடித்து அந்தர்தானமானுர். இந்த ச்லோகங்களை குழந்தைகளுக்குச் சொல்லிவைத்து தினமும் பாராயணம் செய்து வந்தால் எந்தவிதமான பயமும் உண்டாகாது.

नित्यं चिदानन्दरूपं निह्नुताशेष लोकेश वैरिप्रतापं ।
कार्तस्वरागेन्द्रचापं कृत्तिवासं भजे दिव्यसन्मार्गबन्धुं ॥ 1 ॥
शम्भो महादेव देव, शम्भो महादेव देवेश शम्भो

நித்யம் சிதானந்தரூபம் நிஂஹ்நுதாசேஷ லோகேசவைரி ப்ரதாபம்.
கார்தஸ்வரா கேந்திர சாபம் கிருத்திவாஸம் பஜேதிவ்ய ஸன்மார்க பந்தும்.
சம்போ மஹாதேவ தேவ சம்போ மஹாதேவ தேவேச சம்போ.

अङ्गेविराजद्भुजङ्गं अभ्रगङ्गातरङ्गाभिरामोत्तमाङ्गम् ॥
ह्रींकारवाटी कुरङ्गं शुद्धसंसेविताङ्घ्रिं भजे मार्गबन्धुं ॥ 2 ॥
शम्भो महादेव देव, शम्भो महादेव देवेश शम्भो

அங்கே விராஜத்புஜங்கம் அப்ரகங்காதரங் காபிரா மோத்தமாங்கம்
ஹ்ரீம்கார வாடீகுரங்கம், சுத்தஸம் ஸேவிதாங் கிரிம்பஜே மார்கபந்தும்
சம்போ மஹாதேவ தேவ சம்போ மஹாதேவ தேவேச சம்போ.

मन्दारभूतेरुदारं मन्दरागेन्द्रसारं महागौर्यदूरं ।
सिन्दूरगौरप्रचारं सिन्धुराजाधितीरं भजे मार्गबन्धुं । 3 ॥
शम्भो महादेव देव, शम्भो महादेव देवेश शम्भो

மந்தாரபூதேருதாரம் மந்தராகேந்த்ரஸாரம் மஹாகௌர்யதூரம்
சிந்தூரகௌரப்ரசாரம் சிந்துராஜாதிதீரம் பஜேமார்கபந்தும்
சம்போ மஹாதேவ தேவ சம்போ மஹாதேவ தேவேச சம்போ

कन्दर्पदर्पघ्नमीशं कालकण्ठं महेशं महाव्योमकेशं ।
कुन्दाभदन्तं सुरेशं कोटिसूर्यप्रकाशं भजे मार्गबन्धुं ॥ 4 ।
शम्भो महादेव देव शम्भो महादेव देवेश शम्भो

கந்தர்ப தர்பக்ன மீசம் காலகண்டம் மஹேசம் மஹாவ்யோம கேசம்
குந்தாபதந்தம் சுரேசம் கோடிசூர்ய ப்ரகாசம் பஜே மார்கபந்தும்
சம்போ மஹாதேவ தேவ சம்போ மஹாதேவ தேவேச சம்போ.

फालप्रदीप्यात्किरीटं फालनेत्रार्चिषा दग्धपुष्पेषुकीटम् ।
शूलाहतारातिकूटं शुद्धमर्धेन्दुचूडं भजे मार्गबन्धुं ॥ 5 ॥
शम्भो महादेव देव शम्भो महादेव देवेश शम्भो

பாலப்ரதீவ்யத்கிரீடம் பாலநேத்ரார்ச்சிஷாதக்த புஷ்பேஷுகீடம்
சூலாஹதாராதி கூடம் சுத்தமர்தேந்துசூடம் பஜே மார்கபந்தும
சம்போ மஹாதேவ தேவ சம்போ மஹாதேவ தேவேச சம்போ.

अप्पय्यमखिवर्यं रचितं पञ्चरत्नस्तवं मार्गबन्धोरुदारं
नित्यं पठेद्यस्तु भक्त्या तस्य मुक्तिः करस्थैव सायुज्यरूपम्
शंभो महादेव देव शम्भो महादेव देवेश शम्भो

அப்பய்ய மகிவர்யரசிதம் பஞ்சரத்னஸ்தவம் மார்க பந்தோருதாரம்
நித்யம் படேத்யஸ்து பக்த்யா தஸ்யமுக்தி: கரஸ் தைவ ஸாயுஜ்யரூபம்
சம்போ மஹாதேவ தேவ சம்போ மஹாதேவ தேவேச சம்போ.

Grams : COCHUTNI

Phone : 25257, 23665
With extension to rooms

When at Madras Stay at

SRI RAMA BHAVAN'S LODGING

(NEAR HIGH COURT)

46, THAMBU CHETTY STREET, MADRAS-1.

Manufacturers of "777" Brand and Dhideer Food Products
The Hotel noted for IDLI & CHATNI

Proprietors : RSN & RSG

भवाय नमः

ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் அருளிய

॥ मार्ग सहाय लिङ्गस्तुतिः ॥

पयो नदीतीर निवासलिङ्गं बालार्ककोटि प्रतिमं त्रिनेत्रम् ।
पद्मासनेनार्चित दिव्यलिङ्गं वन्दामहे मार्ग सहाय लिङ्गम् ॥ 1 ॥

गङ्गातरङ्गोल्लसदुत्तमाङ्गं गजेन्द्र चर्माम्बर भूषिताङ्गम् ।
गौरी मुखाम्भोज विलोलभृङ्गं वन्दामहे मार्गसहाय लिङ्गम् ॥ 2 ॥

सुकङ्कणीभूत महाभुजङ्गं संज्ञानसंपूर्णनिजान्तरङ्गम् ।
सूर्येन्दु बिम्बानल भूषिताङ्गं वन्दामहे मार्गसहाय लिङ्गम् ॥ 3 ॥

भक्तप्रियं भावविलोलभृङ्गं भक्तानुकूलामल भूषिताङ्गम् ।
भावैकलोक्यान्तरमादिलिङ्गं वन्दामहे मार्गसहायलिङ्गम् ॥ 4 ॥

सामप्रियं सौम्य महेशलिङ्गं सामप्रदं सौम्यकटाक्षलिङ्गम् ।
वामाङ्गसौन्दर्य विलोलिताङ्गं वन्दामहे मार्गसहाय लिङ्गम् ॥ 5 ॥

पञ्चाक्षरीभूतसहस्रलिङ्गं पञ्चामृतस्नानपरायणाङ्गम् ।
पञ्चामृताम्भोजविलोलभृङ्गं वन्दामहे मार्गसहायलिङ्गम् ॥ 6 ॥

वन्दे सुराराधित पादपद्मं श्रीश्यामवल्ली रमणं महेशम् ।
वन्दे महामेरुशरासनं शिवं वन्दे सदा मार्गसहायदेवम् ॥ 7 ॥

பயோநதீதீர நிவாஸலீங்கம் பாலார்ககோடி ப்ரதிமம் திரிநேத்ரம்
பத்மாஸனேனுர்ச்சித திவ்யலிங்கம் வந்தாமஹே மார்க ஸஹாயலிங்கம். 1

கங்கரதரங்கோல்ல ஸதுத்தமாங்கம் கஜேந்திர சர்மாம்பர பூஷிதாங்கம்
கௌரீமுகாம்போஜ விலோலப்ருங்கம் வந்தாமஹே மார்கஸஹாயலிங்கம். 2

ஸுகங்கணீபூத மஹாபுஜங்கம் ஸம்ஞான ஸம்பூர்ண நிஜாந்தரங்கம்
ஸூர்யேந்து பிம்பானல பூஷிதாங்கம் வந்தாமஹே மார்கஸஹாயலிங்கம். 3

பக்தபிரியம் பாவவிலோல ப்ருங்கம் பக்தானு கூலாமல பூஷிதாங்கம்
பாவைகலோக்யாந்தர மாதிலிங்கம் வந்தாமஹே மார்க ஸஹாயலிங்கம். 4

ஸாமப்ரியம் ஸௌம்ய மஹேசலிங்கம் ஸாமப்ரதம் ஸௌம்யகடாக்ஷலிங்கம்
வாமாங்கஸௌந்தர்ய விலோலிதாங்கம் வந்தா மஹே மார்கஸஹாயலிங்கம். 5

பஞ்சாக்ஷரீ பூதஸஹஸ்ர லிங்கம் பஞ்சாம்ருத ஸ்னுனபராயணுங்கம்
பஞ்சாம்ருதாம்போஜவிலோல ப்ருங்கம் வந்தாமஹே மார்கஸஹாயலிங்கம் 6

வந்தே ஸுராராதித பாதபத்மம் ஸ்ரீ ச்யாமவல்லீ ரமணம் மஹேசம்
வந்தேமஹாமேரு சராஸனம் சிவம் வந்தேஸதா மார்கஸஹாய தேவம். 7

श्रीमात्रे नमः

ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் அருளிய

॥ श्री अपीतकुचाम्बा स्तवः ॥

புண்யபூமியாகிய நம் பாரத தேசத்தில் பஞ்ச பூத திவ்ய க்ஷேத்திரங்கள் என்று ப்ரஸித்திபெற்ற ஐந்து க்ஷேத்திரங்களில் ஒன்ருன திருவண்ணுமலை என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில், பகவான் பரமேச்வரன் ஸ்ரீ அபீத குசாம்பாள் ஸமேத ஸ்ரீ அருணுசலேச்வரர் என்ற திருநாமத்துடன் ஜ்யோதிர் லிங்கமாக காக்ஷியளித்துக் கொண்டு பக்தர்களுக்கு அனுக்ரஹம் செய்துகொண்டு ப்ரகாசிக்கிருர். ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் கார்த்திகை உத்ஸவத்தில் ஸ்ரீ அபீதகுசாம்பா ஸமேத ஸ்ரீ அருணுசலேச்வரரை தர்சனம் செய்யும் பொருட்டு சென்று இருந்த ஸமயம் ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் சீத ஜ்வரத்தால் தபித்த ஸமயம் ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் ஸ்ரீ அபீத குசாம்பாளை ஸ்தோத்திரம் செய்தார். கருணையே வடிவமாக உள்ள ஜகன்மாதாவான அன்னை பராசக்தி. பரதேவதை ஸ்ரீ அபீதகுசாம்பாள் ஸ்ரீ தீக்ஷிதருக்கு ஏற்பட்ட ஜ்வரத்தை நிவர்த்தி செய்தாள் என்பது கர்ண பரம்பரையாக கேட்க்கும் செய்தி, மேலும், பூலோகம் பூராவும் ரோகமற்று வாழவேண்டும் என்பதற்காகவே இன்றும் தினமும் தீபாராதனை ஆனஉடன் ஸ்ரீ அபீதகுசாம்பாள் ஸன்னிதியில் மேற்படி ஸ்தோத்திரம் சொல்லப்பட்டு வருவதை காண்கிருேம். இந்த உயர்ந்த ஸ்தோத்திர ரத்தினங்களை கல்வெட்டுகளில் செதுக்கி அடையபலம் ஸ்ரீ பார்வதயம்பாள் ஸன்னிதியில் வைக்கும்படி ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் உத்தரவு ஏற்பட்டு அதன்படி, ஸ்ரீ பார்வதயம்பாள் ஸன்னிதியில் இன்றும் ப்ரகாசிக்கிறது. இந்த மிக உயர்ந்த ஸ்தோத்ரத்தை குழந்தைகளுக்கு மனப்பாடம் செய்வித்து தினமும் பாராயணம் செய்துவந்தால் எந்தவிதமான நோயும் கிட்டே அணுகாது என்பது நிச்சயம்.

आनन्दसिन्धुलहरी ममृतांशुमौले:
आसेविनाममृत निर्मित वर्तिमक्ष्णो: ।
आनन्दवल्लि वितते रमृताद्रिगुच्छं
अम्ब स्मराम्यहमपीत कुचे वपुस्ते ॥ 1 ॥

ஆனந்த ஸிந்துலஹரீ அம்ருதாம்சு மௌளே:
ஆஸேவிநும் அமிருதநிர்மித வர்த்தி மக்ஷ்ணோ:
ஆனந்த வல்லி வித்தே: அமிருதார்த்ரகுச்சம்
அம்பஸ் மராம்யஹம் அபீத குசே வபுஸ்தே.

निर्निद्र कोकनद कोमलकान्तमम्ब
नित्यं सुधानिकरवर्षि पदं त्वदीयम् ।
मूर्छाकरज्वररुजा मम तापितस्य
मूर्ध्नि क्षणं सकृदपीतकुचे निधेहि ॥ 2 ॥

நிர்நித்ர கோகநத கோமல காந்தமம்ப
நித்யம் சுதாநிகரவர்ஷி பதம் த்வதீயம்
மூர்சாகர ஜ்வரருசா மம தாபிதஸ்ய
மூர்த்னிக்ஷணம் ஸக்ருதபீதகுசே நிதேஹி.

शीतांशुकोटि सुषुमाशिशिरैः कटाक्षैः
अव्याजभूत करुणारस पूर पूर्णैः ।
कर्पूर धूलिमिव दिक्षु समाकिरद्भिः
अम्ब क्षणं स्नपय मामरुणाद्रिमान्ये ॥ 3 ।

சீதாம்சுகோடி ஸுஷுமா சிசிரை: கடாக்ஷை:
அவ்யாஜபூத கருணாரஸ பூர பூர்ணை:
கர்பூர தூலிமிவ திக்ஷு ஸமாகிரத்பி:
அம்பக்ஷணம் ஸ்னபய மாம் அருணாத்ரிமான்யே,

आविर्भव क्षणमपीत कुचे पुरस्तात्
अम्ब ज्वरेण महता मम तापितस्य ।
येन त्वदङ्घ्रिरुचिजाल सुधाप्रवाहे
मग्नस्तदैव तनुतापममुं त्यजेयम् ॥ 4 ॥

ஆவிர்பவ க்ஷணமபீத குசே புரஸ்தாத்
அம்ப ஜ்வரேண மஹதா மம தாபிதஸ்ய
யேன த்வதங்கிரிருசி ஜால சுதாப்ரவாஹே
மக்னஸ்ததைவ தனுதாபமமும் த்யஜேயம்.

नानाविधैर्नलिनजातलिपि प्रक्लृप्तैः
आनीतमूर्छमधिकं क्षुभितैर्ज्वराद्यैः ।
आश्वासय क्षणमपीत कुचे कराग्र
क्रीडाकनत्कनक हल्लक सौरभेण ॥ 5 ॥

நாநாவிதை: நலின ஜாதலிபி ப்ரக்லுப் தை:
ஆனீதமூர்ச்சமதிகம் க்ஷுபிதை: ஜ்வராத் யை:
ஆஸ்வாஸய க்ஷணமபீத குசே கராக்ர
க்ரீடாகனத் கனக ஹல்லக ஸௌரபேண,

कण्ठेविषं विषमुचो भुजगाः कपर्दे
पार्श्वेच भूतपतयः प्रमथाश्च भीमाः ।
शोणाचलेश मुपसृत्य भजेत को वा
नस्यात्तवाम्ब सविधे यदि सन्निधानम् ॥ 6 ॥

கண்டேவிஷம் விஷமுசோ புஜகா: கபர்தே
பார்ச்வேச பூதபதய: ப்ரமதாச்ச பீமா:
சோணசலேச முபஸ்ருத்ய பஜேத கோவா
நஸ்யாத் தவாம்ப ஸவிதே யதி ஸன்னிதானம்.

शक्तिर्जगज्जनन पालन भञ्जनेषु
भोगेषु दिव्यमहिषी तरुणेन्दु मौले: ।
सिद्धिः करप्रणयिनी तव सन्निधानं
यन्नासि तस्य तदपीत कुचे न जाने ॥ 7 ॥

சக்திர்ஜகஜ் ஜனன பாலன பஞ்சனேஷு
போகேஷு திவ்யமஹிஷீ தருணேந்து மௌளே:
சித்தி:கர ப்ரணயினீ தவ ஸன்னிதானம்
யன்னஸி தஸ்ய ததபீதகுசே நஜானே.

त्वं साक्षिणी प्रलयभैरव ताण्डवानां
त्वं शेषिणी सहरिधातृचराचराणाम् ।
त्वं मोचिनी सकलसंसृति जालकानां
त्वां ब्रह्मसंविदमपीतकुचे नमामि ॥ 8 ॥

த்வம் ஸாக்ஷிணீ ப்ரலய பைரவ தாண்டவனும்
த்வம் சேஷிணீ ஸஹரிதாதுரு சராசராணும்
த்வம் மோசினீ ஸகலஸம்ஸ்ருதி ஜாலகாணும்
த்வாம் ப்ரம்ஹ ஸம்விதமபீத குசே நமாமி.

For the Best Refreshment and Prompt Service

VISIT

MANI'S CAFE

Opp. K. G. H. O. P. Gate

We also Under take tea Party's and Dinner

Prop.: **R. G. RAMAKRISHNAYYA**

श्रीगुरुभ्यो नमः

ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்திரர் அத்வைத வித்யாசார்யரே

பிரம்ஹஸ்ரீ R. S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்

ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்திரர் அவர்கள் எல்லா வித்யா ஸ்தானங்களிலும் எல்லா தர்சனங்களிலும் எல்லா மதங்களிலும் அதன் உட்பிரிவுகளிலும் கரைகண்ட மஹாபுருஷர் என்பது அவருடைய ஒரு க்ரந்தத்தைப் பார்த்தாலே எல்லோருக்கும் விளங்கும்.

ஒவ்வொரு மஹா புருஷர்களும் தோன்றும் காலம் உலகத்தில் ஏதாவது ஒரு துறையில் கலக்கம் ஏற்பட்ட ஸந்தர்ப்பமாகவேதான் இருக்கும். ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாள் அவதாரம் செய்த சமயமும் அவ்விதமாகவே இருந்தது.

பெரிய சாஸ்திரங்களை சித்தாந்தம் செய்ய வந்த மஹரிஷிகள் தோன்றின ஸமயமும் அவ்விதமே இருந்திருக்கிறது. நியாய சாஸ்திரம் இயற்றிய கௌதமர் அதற்கு வார்திகம் இயற்றிய உத்யோதகர், அதற்கு டீகா இயற்றிய ஆசார்ய வாசஸ்பதி மிச்ரர், அதற்கு தாத்பர்யம் இயற்றிய உதயனாசார்யர் முதலியோர்கள் தோன்றிய காலங்களில் பௌத்த மதங்களால் ஆஸ்திக மதங்களுக்கு கலக்கம் உண்டாகியது. அந்த கலக்கத்தை தங்கள் நூல்கள் வாயிலாக அவர்கள் தீர்த்துவைத்தார்கள். திரும்ப கலக்கம் இப்பொழுது வருமானாலும் அந்த நூல்களைக் கொண்டு தான் கலக்கத்தை தீர்த்துக்கொள்கிறோம்.

ஸ்ரீமத் பகவத் பாதாசாரியாள் அவதார சமயத்திலும் பௌத்த விக்ஞான வாதத்தால் கலக்கமும். மீமாம்ஸகர்கள் நையாயிகர்களால் கலக்கமும். வேதாந்த தரிசனத்திலேயே அபிப்ராய பேதங்களால் கலக்கமும் மோக்ஷ மார்க்கத்திற்கு, ஏற்பட்டு இருந்தது. அவைகளைத் தீர்த்தவர் ஸ்ரீமத் பகவத் பாதாசார்யாள்–பத்மபாதாசார்யாள் க்ரந்தம் இயற்றும் காலம் ப்ராசீன மீமாம்ஸக தர்சனத்தின் எதிர்ப்பு கடுமையாக இருந்தது. ஆகையால் அதை விசேஷமாக அவர்கள் நூல் மூலம் பரிசீலனை செய்யவேண்டியதாய் ஏற்பட்டது. பாமதீகாரர், விவரணகாரர் முதலியோர்கள் பிரகாசிக்கும் சமயம் பாஸ்கராசார்யருடைய கொள்கையின் எதிர்ப்பு அதிகமாய் இருந்தது. ஆகையால் அதை விசேஷமாக அவர்கள் பரிசீலனை செய்திருக்கிறார்கள்.

ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்திரர் அவர்கள் தோன்றிய சமயம் மதத்வேஷ உணர்ச்சியால் எல்லோருக்கும் பரமானந்த நிலையை அடைவிக்கும் மார்க்கமாகிய அத்வைத தர்சனத்திற்கு கலக்கம் உண்டாகும்போல் இருந்தது. அந்த கலக்கத்தை தீர்த்துவைத்த மஹா புருஷர்கள் ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்திராள் பரமேச்வரனுடைய அவதாரம் என்றே சொல்லவேண்டும்.

சிச்சக்தியுடன் கூடிய சிவன் பரப்ரம்ஹம் என்ற ஓர் சித்தாந்தம் இருக்கிறது இது ஸ்ரீ கண்டாசார்யாள் செய்த பிரம்ஹ ஸூத்ர பாஷ்யத்தில் விஸ்தாரமாக கூறப்பட்டு இருக்கிறது. இந்த ஸித்தாந்தத்தை ஸவிஸ்தாரமாக ஸ்தாபித்திருக்கிறார்கள். ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்திரர் அவர்கள், ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாசார்யாள் சித்தாந்தத்தில் ஸகுண ப்ரம்ஹம் உண்டு. அந்த ஸகுண ப்ரம்ஹத்தின் ஸ்வரூபம் சக்தியுடன் கூடின சிவனே, இது பிரம்ஹ ஸூத்ரகாரரான வ்யாஸ பகவானுக்கும், ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாளுக்கும் ஸித்தாந்தமான அப்பிராயம் எப்படியென்றால்—பிரம்ஹ ஸூத்ரத்தில் ஓர்

விசாரம் செய்து ஓர் உபநிஷத் வாக்யத்திற்கு தாத்பர்யம் ஸகுண ப்ரம்மத்தில் எனறு நிரூபிக்கும் இடத்தில் "पत्यादि शब्दः" என்று காரணம் குறிப்பிடுகிறார் வியாஸ பகவான், "पति, ईशान" என்ற சப்தங்கள் இருக்கின்றன. ஆகையால் ஸகுண ப்ரம்ஹம்தான் கூறப்படுகிறது. என்கிறார் ஆக पति शब्द ஸகுண ப்ரம்ஹத்தின் வாசக சப்தமாக கருதுகிறார் வியாஸர் "शब्दादेव प्रमितः" என்ற ஸூத்ரத்தில் ईशान சப்தத்தாலேயே பரமாத்மா என்று தீர்மானம் செய்கிறார். पति சப்தத்தை அதே வ்யாசர் "पत्युरसमञ्जस्यात्" என்ற ஸூத்ரத்தில் சிவன் என்ற அர்தத்தில் குறிப்பிடுகிறார் ஆகையால் ஸகுண பிரம்ஹம் சிவ ஸ்வரூபம் என்று வ்யாசர் அபிப்ராயம் என்று தெரிகிறது. "उमासहायं परमेश्वरंविभु" என்றும் மற்றோர் உபநிஷத் கூறுகிறது. கேனோபநிஷத்தும் பிரம்ஹத்தோடு நிதயம் சேர்ந்திருப்பவர்கள் உமா என்று கூறுறது. ஆகையால் உமையோடு கூடிய ப்ரம்ஹம் என்று தெரிகிறது அது ஸகுண ப்ரம்ஹுந்தான் என்பது தெளிவு.

"दहर उत्तरेभ्यः" என்ற அதிகரணத்தில் ஸ்ரீமத் ஆசார்யாள் பாஷ்யத்தில் 'ब्रह्मपुरं" சரீரம், तथापि அந்த ஜீவபுரத்தில் எப்பொழுதும் ப்ரம்ஹம் ஸன்னிஹிதமாய் இருக்கிறது. "எப்படி ஸாளக்ராமததில் விஷ்ணு எப்பொழுதும் ஸன்னிதானம் கொண்டு இருக்கிறரோ அப்படி", என்று பிரம்ஹஸூதரத்தில் दहराकाश சப்தார்த்தமாய் ஸித்தாந்தம் செய்யும் பிரம்மஸூத்திரத்திற்கு விஷ்ணுவை திருஷ்டாந்தமாக கூறுகிறார்கள் பகவத் பாதர்கள். திருஷ்டாந்தம் வேறு, அதுவே தார்ஷ்டாந்திகமாக இருக்கக் கூடாது என்று இதே அதிகரணத்தில் கூறியிருக்கிறார். ஆகையால் இங்கு தார்ஷ்டாந்திகமாகக் கூறப்படுவது சிவன். அவரை ब्रह्म சப்தத்தால் குறிப்பிடுகிறார். ஆகையாலும் பல அதிகரணங்களில் ஸகுண ப்ரம்ஹத்தை சிவனுக்கு அஸாதாரணமான परमेश्वर சப்தத்தால் கூறுவதாலும் ஸ்ரீ பகவத் பாதாசார்யாளுக்கும் ஸகுணப்ரஹம்மம் சிவன் என்றுதான் அபிப்ராயம், முதல் ஸூத்ரத்தில் ब्रह्म சப்தத்திற்கு அர்தமாக, सर्वज्ञ, सर्वशक्ति, என்று கூறுகிறார்.

"सर्वज्ञता तृप्ति रनादिबोध . . . . षडाहुरंगानि महेश्वरस्य" என்ற புராண ச்லோகம் சிவனுக்கு सर्वज्ञत्व்த்தை கூறுகிறது.

ஆக சக்தி விசிஷ்ட சிவதத்வத்தை (ஸகுணப்ரம்ஹத்தை) உபாஸனம் செய்து முக்தி அடைவது என்ற சித்தாந்தத்தை ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்திரரவர்கள் பரப்பியது ஸ்ரீமத் சங்கரபகவத் பாதாள் ஸித்தாந்தத்திற்கு மிக நெருங்கியது. இக்காரணத்தால்தான் மற்ற விசிஷ்டாத்வைதத்தை அவர் அத்வைதத்திற்கு தூரத்தில் உள்ளது என்று आनन्दलहरी என்றும் தன் க்ரந்தத்தில் குறிப்பிடுகிறார்.

இவ்விதம் இருக்க சைவர் என்று அவரைக் கூறுவது அறியாத்தனமே. அவர் அத்வைத வித்யாசார்யரே. ஸகுண ப்ரம்ஹ விஷயமாக இந்த வ்யாஸத்தில கூறியிருப்பதை முதன் முதலாக ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில் இப்பொழுது விளங்கும் ஸ்ரீமத் ஆசார்ய பாதாள் வாக்கினல் தெரிந்து கொண்டேன். ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்திரரவர்கள் தன் आनन्दलहरी என்ற நூலில் கூறியிருப்பதை இப்பொழுது பார்ததேன் இந்த ஸந்தர்பததில் இதை எழுதும்படி கிடைத்தது என்பாக்கியமே.

॥ शम् ॥

உ

श्री गुरुभ्यो नमः

கனகாபிஷேகமும், கும்பாபிஷேகமும்

श्रीकान्तो मातुलो यस्य जननी सर्वमङ्गला ।
जनकः शङ्करो देवः तं वन्दे कुञ्जराननम् ॥
कामकोटि महापीठ दिव्यालंकार रूपिणे ।
श्रीमते सच्चिदानन्द मूर्तये गुरवे नमः ॥
कालकण्ठेश्वरं वन्दे नीलकण्ठपितामहैः ।
स्थापितं तं निजग्रामे पार्वती सहितं प्रभुं ॥
उमाकान्ते रमाकान्ते येषामासीन्मति स्समा ।
नमामि दीक्षितेन्द्रांस्तान्नय षट्कविशारदान् ॥

எல்லோராலேயும் விரும்பப்படுவதும் துக்க ஸம்பந்தமல்லாததும் கேவல சுகஸ்வரூபமாக உள்ள நான்காவது புருஷார்த்தமான மோக்ஷத்திற்கு ஸாதனம் ஆத்மக்ஞானம் என்று "तरति शोकमात्मवित्" என்கிற இது முதலான ச்ருதிகள் உபதேசிக்கின்றன. அப்படிப்பட்ட ஞானம் சித்த சுத்தி உடையவர்களுக்கே உண்டாகிறது. "कषायेकर्मभिः पक्वे ततोज्ञानं प्रवर्तते" என்று ஸ்மிருதிகள் உத்கோஷிக்கின்றன. இவ்விதம், அந்த அந்த வர்ணாச்ரமத்திற்கு தக்கவாறு கர்மாக்களை. மந்த்ரம், தந்த்ரம், ஸ்வரம் முதலியவைகளில் லோபமில்லாமல் செய்யப்படுகின்ற கர்மானுஷ்டானமே பரமபுருஷார்தமான மோக்ஷத்தை அடைய முதல் படிக்கட்டாக விளங்குகிறது. இப்பேர்ப்பட்ட மஹாமஹிமை வாய்ந்த கர்மாக்களும் அதன்மூலம் ஏற்படும் பக்தி, க்ஞானம் முதலிய மார்கங்களுக்கும் லோபம் ஏற்பட்டு, லோகம் பூராவும் நாஸ்திகம் பரவி ஜனங்கள் மஹத்தான இருளில் சிக்கிக் கொண்டு தபித்துக்கொண்டு இருந்த நேரத்தில் கருணாமூர்த்தியான பகவான் பரமேச்வரன் சுமார் 2000 ஆண்டுகளுக்குமுன் கேரள தேசத்தில் காலடி என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் ஆர்யாம்பா சிவகுரு என்னும் புண்ய தம்பதிகளின் அதிர்ஷ்டவசமாக அவர்களுக்கு தனயனாக அவதரித்து பகவத் பாதர் என்ற ப்ரஸித்தியை அடைந்து பாகண்டர்களால் வர்ணாச்ரம மார்க்கங்களுக்கு உண்டாக்கப்பட்ட துன்பங்களை அடியோடு களைந்து தன்னுடைய 32 வயதுக்குள் ஆங்காங்கு வளர்ந்துவரும் துர்மதங்களை வேரோடு களைந்தெறிந்து, ஆறு மதங்களை ஸ்தாபனம் செய்து, பரிசுத்தமான அந்தக் கரணங்களை உடையவர்களின் பொருட்டு, வேதாந்த சித்தாந்தமான அத்வைத சித்தாந்தத்தை பரம கருணையுடன் உபதேசித்து, அந்த அந்த அதிகாரிகளின் புத்தி பக்வத்திற்கு ஏற்றவாறு சாரீரக பாஷ்யம் முதலிய நூற்றுக் கணக்கான நூல்களை இயற்றி லோகானுக்ரஹம் செய்யும்பொருட்டு மடங்களை ஸ்தாபனம் செய்து, வேத, வைதிக மதங்

களை ரக்ஷித்து அத்வைதத்தை பரவச் செய்வதில் சக்தியும் சாமர்த்தியமுமுள்ள பரம ஹம்ஸ பரிவ்ராஜக ஸம்யமிச்ரேஷ்டர்களான நான்கு சிஷ்யர்களேயும் நியமித்து ஸ்வாதிஷ் டானமாகியதும் பாரத தேசத்திற்கே நாபீஸ் தானமாக விளங்கும் முக்தி க்ஷேத்ரமாகிய ஸ்ரீ காஞ்சி க்ஷேத்ரத்தில் ஸர்வக்ஞ பீடா ரோஹணம் செய்து ஸ்ரீ காமகோடி பீடத்தை அலங்கரித்து அங்கேயே சித்திபெற்ருர் என் பதை யாறும் அறிவார்கள். அந்த பரம்பரை அவிச்சின்னமாக நாளதுவரை ஸ்ரீ காமகோடி பீடத்தை அலங்கரித்து ஸ்ரீ பகவத்பாதாள் மார்கத்தில் சென்று தர்மத்தை நிலைநிறுத்திக் கொண்டு நம் அனைவரையும் கருணையுடன் அனுக்ரஹித்து வரும் புண்யமூர்த்தி பூஜ்ய ஸ்ரீ ஆசார்யாள் திவ்யசரணுரவிந்தங்களில் அனந்தகோடி ப்ரணுமங்களை ஸமர்பணம் செய்யவேண்டியது, பாரதபூமியில் உள்ள அனைவர்களின் முதற்கடமையாகும்.

மேலும் சுமார் 400 வருஷங்களுக்கு முன்பு மீண்டும் காலக்கேடால் வைதிக மார்க்கத் திற்கு தடை ஏற்பட்டு குதர்க்கம் வளர்ந்து பரமசிவனை உபாஸிக்கும் ஸன்மார்கத்திற்கு பங்கம் ஏற்பட்டு லோகம் பூருவும் அசாந்தி ரோகம் பரவின ஸமயம் சிவ ரகஸ்யத்தில் கூறியபடி பரமேச்வரன் ஸ்ரீ காஞ்சீ மண்ட லத்தில் அடங்கிய அடையபலம் என்னும் புண்ய பூமியில் அத்வைத வித்யாமுகுரம் முதலிய நூல்களை இயற்றி "அத்வைத வித்யாசார்யர்" என்று ப்ரஸித்தி அடைந்த ஸ்ரீ ரங்கராஜாத்வரீ என்னும் மஹானுக்கு தனயனுக அவதரித்து ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் என்ற திருநாமத்துடன் விளங்கி, 72 வயது பாரத பூமியில் வஸித்து ச்ருதி, ஸ்ம்ருதி, புரா ணம் இவைகளில் விதிக்கப்பட்ட சித்த சுத்தியை கொடுக்கவல்ல ஸகலவிதமான யக்ஞாதி கர்மாக்களை அனுஷ்டானம் செய் தும், ஸ்ரீ கண்டபாஷ்ய வ்யாக்யானமாகிய சிவார்கமணி தீபிகையின் மூலம் பரமசிவோத் கர்ஷத்தை ஸ்தாபித்து, "சிவாத்வைதமத ப்ரதிஷ்டாபனுசார்யர்" என்றும் போற்றப் பட்டு வந்தார்.

ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் எல்லா மதங்களுக் கும்எல்லா சாஸ்திரங்களுக்கும் 104 நூல்களை இயற்றி உதவி புரிந்துள்ள மஹான். இவ ருக்கு சிவ, விஷ்ணு பேதமே கிடையாது எல்லா மூர்த்திகளையும் ஸ்துதித்து ஸ்தோத்தி ரங்கள் இயற்றியுள்ளார். தனக்கு ஆத்ம போதம் ஏற்படும் பொருட்டு ஸ்ரீ பகவத் பாதா ளுடைய ப்ரஸன்ன கம்பீரமான பாஷ்யத்தை ஆதாரமாகக்கொண்டு அத்வைத தத்வத்தை நிலைநிறுத்தி சிதம்பர க்ஷேத்திரத்தில் ஸ்ரீ நட ராஜாவின் ஒளியில் கலந்தார் என்பதை யாரும் அறிவார்கள்.

ஸ்ரீ தீக்ஷிதர் வேலூரில் அரசுபுரிந்த சின்ன பொம்ம மஹாராஜாவின் சபையில் ஆஸ்தான வித்வானுக இருந்த ஸமயம் தீக்ஷி தர் புலமையைக் கண்ட மஹாராஜா தீக்ஷி தரைப் பாராட்டி அவருக்கு கனகாபிஷேகம் செய்வித்து மகிழ்ந்தான். ஸ்ரீ தீக்ஷிதரும் அந்த த்ரவ்யத்தைக் கொண்டு தனது ஜன்ம பூமி யாகிய அடையபலத்தில் ஸ்ரீ காலகண்டேச் வர ஸ்வாமி தேவாலயத்தையும், ஸ்ரீ வரதராஜ ஸ்வாமி தேவாலயத்தையும் நிர்மாணம் செய்து வழிபட்டுவந்ததுடன் 500 வித்வான் கள் அங்கு தங்கி பாஷ்யம் படிக்கவும் வஸதி செய்துள்ளார் என்று அந்த தேவாலயத்தில் உள்ள கல்வெட்டுகள் மூலம் தெரிகிறது. நாளடைவில் இரு தேவாலயங்களும் ஜீர்ண மாகிவிட்டன. 1957-ம் வருஷம் ஸ்ரீ காஞ்சி க்ஷேத்திரத்தில் சிவா ஸ்தலத்தில் பூஜ்யஸ்ரீ கருணுமூர்த்தியான நமது ஜகத்குரு காம கோடி ஆசார்யாள் விஜயம் செய்திருந்தார் கள். அந்த ஸமயம் நாங்கள் அங்கு சென்று காலகண்டேஸ்வர ஸ்வாமி தேவாலயத்தை ஜீர்ணேத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்யும் பொருட்டு அனுக்ரஹத்தை பிரார்த் தித்தோம். அந்த ஸமயம் பெரியவாள் எங்க ளுக்கு உத்தரவிட்ட விபரம் பின்வருமாறு.

ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் நம் மதத்திற்கு செய்திருக்கும் உதவிகளேயும், பிற மதத்திர்க்கு நூல்எழுதி உதவிபுரிந்த அவருடைய உதார குணத்தையும், பகவத்பாதாளிடத்தில் அவருக்கு ஏற்பட்ட ஆழ்ந்த பக்தியையும் ஸவிஸ்தாரமாக மூன்று மணி நேரம் விளக்கி எங்களுக்கு உபதேசித்து அருள்புரிந்த நாளே எங்களது வாழ்நாளில் பாக்யம்பெற்ற நாளாக இருப்பது மட்டும் அல்லாமல் எங்களுக்கு ஜன்மஸாபல்யத்தை உண்டாக்கின நாளாகவும் அமைந்தது.

ஸ்ரீ தீக்ஷிதர் சாஸ்திரங்களாகிற அஸதிவாரத்தின்மேல் இந்த தேவாலயத்தை அமைத்துள்ளார். இந்த தேவாலய ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகம் செய்வதுடன், ப்ரதி வருஷம் ஸ்ரீ தீக்ஷிதர் ஜயந்தி உத்ஸவத்தை நடத்தியும், அவர்களால் இயற்றப்பட்ட நூல்களில் வாக்யார்தங்கள் முதலியவைகள் நடத்த வேண்டும். மேலும் ஒரு நூல் நிலேயம் ஏற்படுத்தி, ஸ்ரீ தீக்ஷிதர் எழுதிய 104 நூல்களேயும் ப்ரசுரிக்க வேண்டும் என்று எங்களுக்கு உத்தரவிட்டு அனுக்ரஹித்து அருள் புரிந்தார்கள்.

ஸ்ரீ சரணுள் அனுக்கிரஹத்தையே முக்யதனமாகக் கொண்டு 1957-ம் வருஷம் தேவாலய திருப்பணி தொடங்கப்பட்டது. பிறகு ஸ்ரீ ஆசார்யாளும் சென்னே நகரத்திற்கு விஜயம் செய்தார்கள், ஸ்ரீ ஆசார்யாள் தினமும் இரவில் உபன்யாஸத்தில் ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களின் நூல்களின் மஹிமையை போதிக்க, மக்கள் அனேவரும் தீக்ஷிதர் அவர்களிடத்தில் அளவுகடந்த பக்தியை அடைந்தார்கள். ஆஸ்திக பெருமக்களுக்கு உண்டான பக்தியே திருப்பணிக்கு முக்யமான ஆணிவேராக அமைந்தது. 1960 பிப்ரவரி மாதம் பூந்தமல்லிக்கு அருகாமையில் உள்ள பேட்டையில் ஸ்ரீ ஆசார்யாள் விஜயம் செய்திருந்தார்கள். கும்பாபிஷேகத்தை நடத்தித்தரவேண்டும் என்று ப்ரார்த்தனே செய்துகொள்ளும்பொருட்டு நாங்கள் அங்கு சென்ருேம். அன்று மஹா சிவராத்திரி புண்ய காலம் கைலாஸத்தில் உள்ள பரமேஸ்வரனே தர்சனம் செய்ததுபோல் உள்ள காக்ஷி இன்னும் கண்முன் காக்ஷியளிக்கிறதே தவிர சொல்ல சக்தியற்றவனுக உள்ளேன். அந்த ஸமயம் எங்கள் க்ராமத்தில் ஏரி, குளம், கிணறுகளில் துளி ஜலமும் இல்லே. எப்படி இந்த மஹத்தான கார்யம் நடக்கப்போகிறதோ என்று மிகவும் பயமாக இருக்கிறது என்று நாங்கள் விக்ஞாபனம் செய்த ஸமயம் ஸ்ரீ ஆசார்யாள் "भयकृत् भयनाशनः கவலே வேண்டாம். நன்ருக நடக்கும்" என்று அநுக்ரஹித்து ப்ரஸாதம் வழங்கினுர். பிறகு பூஜ்யஸ்ரீ பெரியவாளும், புதிய பெரியவாளும் அடையபலம் வந்துசேர 13 நாட்கள் ஆகின. இதன் மத்தியில் ஸ்ரீ ஆசாயாள் அருளால் கனமழை பெய்து ஏரி, குளம், கிணறுகளில் ஸமிருத்தியான ஜலம் வந்து சுபிக்ஷம் தோன்றியது. 16–3–60-ல் மஹா கும்பாபிஷேகமும் ஸ்ரீ ஆசார்யாள் ஸான்னியத்தில் மிகச் சிறந்த முறையில் நடந்ததை ஆஸ்திக பொதுமக்கள் அனேவரும் நேரில் கண்டு அனுபவித்தார்கள். மிகவும் சின்ன கிராமத்தில் தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கி தரிசனம் செய்து ஜன்ம ஸாபல்யத்தை அடைந்தார்கள். சின்னபொம்ம மஹாராஜா ஸ்ரீ தீக்ஷிதருக்கு கனகாபிஷேகம் செய்த தினத்தில்கூட இவ்வளவு ஜனக்கூட்டமும் சிறப்பும் இருந்திருக்காது என்று மக்கள் அனேவரும் பேசிக்கொண்டு இருந்தாகள். இவ்வளவு சிறப்புக்கும் ஸ்ரீ ஆசார்யாள் அநுக்ரஹத்தைத் தவிர வேறு அல்ல. எங்கள் முன்னேர்கள் செய்த புண்யபலனுலேயே எங்களுக்கு இந்த பாக்யம் கிடைத்தது.

திருவல்லிக்கேணி வாஸியான ஸ்ரீ ஜகன்னுத அய்யர் ஸ்ரீ அம்பாள் ஆலயத்தை தனியாக நிர்மாணம் செய்ய உதவி புரிந்ததுடன் கும்பாபிஷேகத்திற்கும் உதவி புரிந்தார்.

பி. ஜி. பால் கம்பெனி உரிமையாளர் ஸ்ரீ K. நீலகண்ட அய்யர் அவர்கள் திருப்பணிக்கும் கும்பாபிஷேகத்திற்கும் உதவிசெய்தது மட்டுமல்லாமல் உடனிருந்து எல்லாவற்றையும் கவனித்து எல்லாவகையிலும், உத்ஸாக மூட்டி வருவதுடன் நித்ய பூஜைகளுக்கும் அன்றுமுதல் உதவி புரிந்துவருகிறார். மதுரையில் வஸிக்கும் ஸ்ரீ M. விஸ்வேஸ்வரன் அவர்களும் நித்யபூஜைக்கு உதவி செய்து வருகிறார். மற்றும் ஸ்ரீ M. S. சாம்பமூர்த்தி சாஸ்திரிகள் ஸ்ரீ R. நீலகண்ட அய்யர், ஸ்ரீ K. நடேச அய்யர், ஸ்ரீ Y. கிருஷ்ணமூர்த்தி அய்யர், ஸ்ரீ டாக்டர் C. P. ராமஸ்வாமி அய்யர், ஸ்ரீ T. விஸ்வநாத அய்யர், ஸ்ரீ M. சம்பந்த முதலியார் முதலிய அனேக ஆஸ்திக பக்தர்கள் அனைவரும் பெரும் உதவிபுரிந்துள்ளார்கள். இவ்வளவு ஜனங்களும் சுகமாக செல்வதற்கு வஸதியாக குறுகிய காலத்தில் பாதை அமைப்பதில் உதவி புரிந்த ஸ்ரீ S. வெங்கடேஸ்வரன் அவர்களின் அன்புகலந்த உத்ஸாகத்துடன் கூடின தொண்டின் மூலம் ஸ்ரீ ஆசார்யாள் ஸ்ரீ தீக்ஷிதர் இருவர்களிடத்திலும் அவருக்கு உள்ள பக்தியை எங்களால் உணரமுடிந்தது, மேலும் ஸ்ரீ மடத்தில் ஸ்ரீ மானேஜர் முதல் யாவரும் அன்புகலந்த உத்ஸாகத்துடன் செய்த உபகாரமே கும்பாபிஷேகத்தின் சிறப்புக்கு ஆணிவேராக அமைந்தது என்று கூறுவது மிகையாகாது. சென்னை அரசாங்கம், சென்னையிலிருந்து அடையபலத்திற்கு விசேஷ பஸ்கள் விட்டு மக்களுக்கு உதவி புரிந்தன. ஆரணியிலிருந்து அடையபலத்திற்கு அடிக்கடி தனி பஸ்கள் விட்டு கார்த்திகேயன் பஸ் முதலாளி உதவிபுரிந்ததற்கு ஸ்ரீ M. S. சாம்பமூர்த்தி சாஸ்திரி அவர்களின் முயற்சி பாராட்டத் தக்கது. கும்பாபிஷேகத்திற்கு நேரில் வரமுடியாதவர்களும் கூட ஸ்ரீ ஆசார்யாள் உபந்யாஸ ரூபமான உபதேச ரஸத்தைப் பானம்செய்யும்படி அகில இந்திய ரேடியோ நிர்வாகஸ்தர்கள் உதவி செய்துள்ளார்கள். கும்பாபிஷேகத்தில் பூஜ்ய ஸ்ரீ ஆசார்யாள் அவர்களின் அனுக்ரஹ ரூபமான வாங்முக உபதேசங்களை காம கோடி ப்ரதீபத்தில் தொடர்ந்து வெளி வந்ததை ஆஸ்திக பெருமக்கள் அனைவரும் அனுபவித்திருப்பார்கள் பூஜ்யஸ்ரீ ஆசார்யாள் அனுக்ரஹபலத்தால் கும்பாபிஷேகம் முதல் நித்ய பூஜைகளும், விசேஷ பூஜைகளும், ஆஸ்திக பக்தசிகாமணிகளின் உதவியால் நடந்து வருகின்றன. இந்த ஜீர்ணோத்தாரண வேலையில் என் தகப்பனாருக்கு உதவி புரிந்த பிரம்ஹஸ்ரீ குப்பா தீக்ஷிதர், பிரம்ஹஸ்ரீ M. V. நடராஜ சாஸ்திரிகள், ஸ்ரீ ராமநாத குருக்கள், இவர்களை மறக்கமுடியாது.

ஸ்ரீ ஆசார்ய தீக்ஷித கோசம்

மஹா கும்பாபிஷேகம் நடந்த சுதினமாகிய 16-3-60ல் பூஜ்ய ஸ்ரீ ஆசார்யாள் "ஸ்ரீ ஆசார்ய தீக்ஷிதகோசம்" என்ற பெயரிட்டு ஓர் நூல் நிலையத்தை ஏற்படுத்தி நியாய ரக்ஷாமணி முதலிய சில நூல்களை ஸ்ரீ மடத்திலிருந்து அளித்தும், ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்திலிருந்து பல நூல்களைக் கொடுக்கும்படி செய்தும் அருள்புரிந்துள்ளார்கள். மேலும் அனேக நூல்களை கொடுத்தும் இதை வளர்த்தும் பலனுடையதாகச் செய்யும்படி ஆஸ்திக பெருமக்கள் அனைவரும் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

ஸ்ரீ ஆசார்யாள் ஆக்ஞையின்படி ப்ரதி வருஷமும் கன்யாமாஸம் கிருஷ்ண பக்ஷம் ப்ரதமை அன்று ஸ்ரீ அப்பய்யதீக்ஷிதர் ஜயந்தி மஹோத்ஸவம் நடந்து வருவதும் ஆஸ்திக பெருமக்கள் அறிந்ததே.

ஸ்ரீ காலகண்டேஸ்வர ஸ்வாமி தேவாலய மஹா கும்பாபிஷேகத்திற்கு, பூஜ்யஸ்ரீ ஆசார்யாள் விஜயம் செய்து அனுக்ரஹித்து எங்களுக்கு அடியில் கண்ட ஆக்ஞையை அளித்தார்கள். 'ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் "நமே மிதா பாதி பரஸ்ய பும்ஸ:" என்று சொன்னது மட்டு மல்லாமல் செயலிலும் காட்டுவதற்கே

x Reason opposing sentiment, bigotry, partisanship ... faith ... substitution ... must always accept ...

இரு தேவாலயங்களையும் நிர்மாணம் செய்துள்ளார்கள். இந்த இரு தேவாலயங்களும் இரு கண்களைப்போன்றவை. ஆகவே ஸ்ரீ காலகண்டேஸ்வர ஸ்வாமி தேவாலயத்தைப்போல் ஸ்ரீ வரதராஜஸ்வாமி தேவாலயத்தையும் ஜீர்ணோத்தாரணம் செய்து கும்பாபிஷேகத்தையும் செய்து முடிக்க வேண்டும் என்று உத்தரவு இட்டுள்ளார்கள். அதற்கிணங்கி ஸ்ரீ P. S. ஜகன்னாத அய்யர் அவர்கள் ரூபாய் இரண்டாயிரம் கொடுத்து திருப்பணியை துவக்கும்படி எங்களுக்கு உத்ஸாகத்தை கொடுத்தார். ஸ்ரீ ஆசார்யாள் ஆக்ஞைக்கு இணங்கி முக்கூர் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீனிவாஸாசாரியார் அவர்கள் ஆரணியில் உபன்யாஸம் செய்த ஸமயம் ஆரணியில் உள்ள வக்கீல்கள், வ்யாபாரிகள் மற்றும் ஆஸ்திக அபிமானிகள் மூலமாகவும், சிகந்திராபாத்தில் ஸ்ரீ ராமநவமி கலை விழா சார்பில் காஞ்சீபுரம் ஸ்ரீ ப்ரம்மேசனார் உபன்யாஸம் செய்த ஸமயம் அங்குள்ள ஆஸ்திகர்கள் மூலமும் ஸ்ரீ சுபஸ்ரீ ஸ்ரீ ஹரிஹரன் கோஷ்டியினர் கல்கத்தாவில் தென்னிந்திய பஜனை ஸமாஜத்தின் சார்பில் நடந்த வில்லுப் பாட்டு நிகழ்சசியின் மூலமும் வசூலான தொகையைக்கொண்டும் ஸ்ரீ வரதராஜ ஸ்வாமி தேவாலயம், கடகால் முதல் எல்லாம் கருங்கல்லாலேயே புதியதாய் அமைக்கப் பெற்று வருவது தற்சமயம் தளம்வரை வந்திருக்கிறது- இனி ஸ்தூபி, சித்திரவேலைகள், கோபுரம். மதில்சுவர், முதலியவைகள் நடக்கவேண்டி யிருக்கிறது. இதற்கு சுமார் 10,000 பத்தாயிரம் ரூபாய் தேவைப்படலாம் என்று கருதப்படுகிறது. பிறகு கும்பாபிஷேகம் நடக்கவேண்டும். ஆஸ்திக பெருமக்கள் உதவிபுரிய வேண்டும் என்று வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள். திருப்பணி பூர்த்தி அடைய வாக்ஸஹாயம் செய்யும் பொருட்டு பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் மஞ்சக்குடி ஸ்ரீ ராஜகோபாலசர்மா அவர்கள், ஸ்ரீ கிருபாநந்தவாரியார் அவர்களும் இசைந்துள்ளார்கள் என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஸ்ரீ காலகண்டேஸ்வர ஸ்வாமி தேவாலய திருப்பணிக்கும் கும்பாபிஷேகத்திற்கும் ஏற்கெனவே உதவிபுரிந்தவர்களுக்கும் இனி உதவிபுரிகிற ஆஸ்திக பெருமக்களுக்கும் நன்றிகலந்த நமஸ்காரங்களை மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பூஜ்யஸ்ரீ பரமாசார்யாள் அனுக்ரஹபலத்தால் ஸ்ரீ காலகண்டேஸ்வர ஸ்வாமி தேவாலய மஹா கும்பாபிஷேகம்போல் பூஜ்யஸ்ரீ ஆசார்யாள் ஸான்னித்யத்திலேயே ஸ்ரீ வரதராஜ ஸ்வாமி தேவாலய மஹா கும்பாபிஷேகமும் நடைபெறவேண்டும் என்று ஜகன் மாதாவான ஸ்ரீ காமாக்ஷி தேவியின் திவ்ய சரணாரவிந்தங்களிலும், பூஜ்யஸ்ரீ ஆசார்யாள் திவ்ய சரணாரவிந்தங்களிலும் அனந்த கோடி ப்ரணாமங்களை ஸமர்ப்பணம் செய்து பிரார்த்திததுக்கொள்கிறோம்.

சிவம்

कालकण्ठेश्वरं कालं - कालं कालत्रयाश्रिरम् ।
कालत्रयेऽपि कलये कलिदोषापनुत्तये ॥

॥ शिवम् ॥

श्री गुरुभ्यो नमः



श्री चन्द्रमौळीश्वराय नमः

स्वस्ति श्रीमदखिलभूमण्डलालङ्कार त्रयस्त्रिंशत्कोटिदेवता सेवित श्रीकामाक्षी देवीसनाथ श्रीमदेकाम्रनाथ श्रीमहादेवीसनाथ श्रीहस्तिगिरिनाथ साक्षात्कार परमाधिष्ठान सत्यव्रतनामांकित काञ्ची दिव्यक्षेत्रे शारदामठ सुस्थितानां अतुलित सुधारसमाधुर्य कमलासन कामिनीधम्मिल्ल संफुल्ल मल्लिका-मालिका निष्यन्दमकरन्दझरीसौवस्तिक वाङ्निगुम्भ विजृंभणानन्द तुन्दिलितमनीषिमण्डलानां अनवरताद्वैत विद्याविनोद रसिकानां निरंतरालंकृतीकृत शान्तिदान्तिभूम्नां सकलभुवन चक्रप्रतिष्ठापक श्रीचक्र प्रतिष्ठाविख्यात यशोलंकृतानां निखिलपाषण्डषण्डकण्टकोद्घाटनेन विशदीकृतवेदवेदान्तमार्ग षण्मत-प्रतिष्ठापकाचार्याणां श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य श्रीमदादि शंकरभगवत्पादाचार्याणां इदानींतन श्रीकांची कामकोटि पीठाधिप श्रीचन्द्रशेखरेन्द्र सरस्वतीनां श्री जयेन्द्रसरस्वतीनांच दिव्य चरणारविन्देषु सविनयं सप्रश्रयं साञ्जलिबन्धंचानन्तकोटि प्रणामानि समर्पयामः ।

K. NATESA IYER & Co., M.G.S.T. No. 5864

5, ANNA PILLAI STREET, G. T. MADRAS-1. C.S.T, No. 7611

Wholesale Dealers in:

JAGGERY, JAGGERY POWDER, TAMARIND, CHEEKAI ETC.

Tel. Address: "SWAYAMBU" Telephone No: 24476

శ్రీ మదప్పయ్య దీక్షితులవారి ప్రతిభాసంపన్నత.

ఆకెళ్ల అచ్యుత రామమ్

శ్రీ మదప్పయ్య దీక్షితులవారు భగవదంశ సంభూతులు; కారణజన్ములు. బౌద్ధాది యితర మతానుయాయులు హిందూధర్మమును పెడమార్గమును బట్టించుచున్న విపత్సమయమున సాక్షాత్ పరమేశ్వరావతార సంభూతులైన శ్రీ ఆదిశంకర భగవత్పాదు లుద్భవించి, తమ యశేషము ప్రతిభావిజ్ఞానములచే పునీతమైన హిందూధర్మమును పునర్వ్యవస్థీకరించిరి. అదే విధమున, పదునారవ శతాబ్దమునాటికి వైష్ణవ మతానుయాయులు కొందరు శైవమతానుచారములను శైవసిద్ధాంతములను దుష్టముగ ఖండించి ప్రజలయొక్క ఆధ్యాత్మిక జీవనముల యందొక విపర్యయము కల్పించిన దుస్సమయమునందు, శ్రీమదప్పయ్య దీక్షితుల వారుద్భవించి, తమ ప్రతిభావిజ్ఞానములతో, శివపూజామహిమను శైవమత సిద్ధాంతముల యొక్క ప్రాధాన్యతను లోకమునకు నిరూపించిరి. శివరహస్య మను గ్రంథమందుదహరించినట్లుగ-శైవశాస్త్రము భూస్థలియందు లుప్తమై పోబోవుచున్న కాలమందు శ్రీమదప్పయ్య దీక్షితులవారుద్భవమంది. ఆ మతమును పునరుజ్జీవిత మొనర్చి,విస్తరింపఁజేసి "శ్రీకంఠమత ప్రతిష్ఠాపనాచార్యుల"ను ప్రఖ్యాతి నందిరి. ఇట్టి అమేయ ప్రతిభాసంపన్నులైన దీక్షితుల వారిని గూర్చి విజ్ఞులుదహరించిన విషయముల నీతరువాత పొందుపఱచిన విధమున, సుపరిచితములుగా జేసికొనుట సజ్జనుల కందరకును కర్తవ్యము.

